# இந்து தர்மம்

**1995 பங்குனி மீ**



வெளியீடு :

இந்து சமயப் பேரவை — யாழ்ப்பாணம்



உ

சிவமயம்

# " இந்து தர்மம் "

## மாதாந்த ஆத்மீக சஞ்சிகை

வியனுல கனைத்தையும் அமுதென நுகரும்
வேதவாழ்வினைக் கைப் பிடித்தோர்.


மலர் 6 1995 பங்குனி

வெளியீடு :

இந்து சமயப் பேரவை — யாழ்ப்பாணம்

தனிப் பிரதி : ரூபா 10/-

ஆண்டுச் சந்தா : ரூபா 100/-


பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| எமது சிந்தனை | 145 |
| அறவினை | 147 |
| பங்குனி உத்தரத் திருநாள் மகிமைகள் | 149 |
| சித்தர்கள் வரிசையிற் செல்லாச்சி அம்மையார் | 152 |
| திருநாடு திருநகர் | 154 |
| எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பர்ள் | 157 |
| காரடையா நோன்பு | 158 |
| சிவனை மறவாதே கடமையைச் செய்..... | 159 |
| கொடிவாரம் — ஆரம்பவிழா | 162 |
| கனடாவில் சைவசமயம் | 163 |
| ஈழத்துச் சைவர்கள் பார்வையாளர்களாக இன்றி........ | 165 |
| திருடனைத் திருத்திய வேடம் | 167 |
| நவக்கிரகம் பற்றி ஓர் ஆய்வு — சந்திரன் | 168 |
| சந்தேகம் தெளிதல் | 171 |

உ
சிவமயம்

## எமது சிந்தனை

### அரச தர்மம்

பென்னம்பெரிய தர்மஸ்தாபனம் இந்த உலகம். எத்தனை கோடியுயிர்களானாலும் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் எந்த நிபந்தனையுமின்றி அநுபவிக்க ஒரு துட்டும் அறவிடாது ஏகபோகமாய் விடப்பட்டிருக்கிறது இத்தர்மஸ்தாபனம். இங்கு நிலம் இலவச சேவையாற்றுகிறது; நதிகள் இலவசசேவை செய்கின்றன; விருட்சங்கள் இலவசசேவை செய்கின்றன; முகில்கள் இலவசசேவை யாற்றுகின்றன; நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன் ஏன் நட்சத்திரங்கள்கூட இலவசசேவைதான் ஆற்றுகின்றன. சீவபிராணிகளின் சுகபோக வாழ்வுக்கு வேண்டுவன எல்லாம் வேறெங்கிருந்தும் எதிர்பார்க்கப்பட வேண்டுவதில்லை, எல்லாம் இந்த ஸ்தாபனத்தில் நிறைய நிறைய உண்டு. இதுவரை ஒழிந்து போனதை விட எத்தனையோ கோடிமடங்கு இன்னமும் இதிலுண்டு. தினசரி விரயமாகிக் கொண்டிருப்பனபோற் பலமடங்கு தினசரி உற்பத்தியாகிக் கொண்டு முள்ளது. இங்கே இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க என்று ரமித்திருப்பதற்கு ஏதுமொரு குறைவில்லை. ஆனால்,

“ஊரான் ஊரான் தோட்டத்திலே ஆரோ
ஒருவன் போட்டானாம் வெள்ளரிக்காய் — அதைக்
காசுக்கு நாலாக விற்கச்சொல்லி நல்ல
காகிதம் போட்டானாம் வெள்ளைக் காரன்” என்ற ஒரு பழம்பாட்டும் உண்டு. வெள்ளைக்காரன் — அரசு என்று வைத்துக்கொண்டால் அப்பால் விளக்கந் தேவையில்லை. [காகிதம் - கட்டளை (order)]

இன்றைய அரசு பேர்வழிகள் படுமோசம், இது என்ன? ஆர்சொத்து? இது ஆருக்குரியது? நாமார் இதற்குச் சட்டத்திருக்குகள் பண்ண? என்ற விவேகமில்லை. இந்தப் பெரிய தர்மஸ்தாபனத்தை அமைத்தவன் யார்? என்ன நோக்கத்துக்காக அமைத்தான்? எங்கள் எண்ணத்துக்கு நாங்கள் இதிலே கண்மூடித்தனமாகக் காறுவாறு பண்ணிக் கொண்டிருந்தால் அவன் எக்கணம் என்ன நினைப்பான்? என்ற அச்சபயம் அநுப்பதைக்கவும் கிடையாது இதுகளிடத்தில். என்றாலும், தங்கள் ராச்சியம் தர்மராச்சியம்; தங்கள் சக்கரம் தர்மசக்கரம்; என்று பீற்றிக்கொள்வதிலும் ஒரு தற்பெருமை.

பாப்பரசருக்குப் பாதுகாப்பளிக்க முப்பதினாயிரம் படைவீரர். இருந்தும், முப்பது மீற்றருக்குள் ஒருவராவது கால்வைக்கத் தடை. இவ்வளவுக்குக் கோழைகளாய்ப் போய்விட்டோமே என்ற நாணத்தின் சாயலுமில்லை இதுகளில். இது இக்கால விநோதம்.

உலகைப் படைத்த இறைவனால், இதை அநுபவிக்கும் உயிர்கள் இது பற்றிய தங்கள் நயப்பு வியப்புக்களையோ அநுபவிப்பதில் தமக்குள்ள இட்டல் இடைஞ்சல்களையோ தெரிவித்துக் கொள்வதற்குத் தன்னை நேரிற் காணமுடியாத நிலையில் இருப்பதை முன்னிட்டு அவர்கள் காணத்தக்க உருவில் தன் பிரதியாக இருக்க வைக்கப்பட்டவன் அரசன். அவனுக்கும் "இறை"தான் உரிய பெயர். தன்நிலையை உணர்ந்த அவனும் தன்னை நியமித்த இறைவனுக்கு நீங்கா நன்றிக் கடப்பாட்டுடன் எங்கே அவன் விருப்பத்துக்கு இம்மியளவு விலகி விடுவேனோ என்ற அச்சபயத்துடன் நாட்டையாண்ட காலம் அக்காலம்.

இன்றைய அரசுகளுக்கு மனிதநீதியை முழுங்குதற்கு ஆட்சிச்சட்டம் பாதுகாப்பரண். அன்றைய அரசன் மனுநீதியை நடைமுறைப்படுத்துதற்கு ஆட்சிச் சட்டம் இடைஞ்சலாயிருந்தால் அது அவனுக்குப் பரமவிரோதி. மனுவேந்தன் செய்தி இதற்கு மலையிலக்கு. மனுவின் மகன் கொலைப் பழிக்காளாகி விட்டான். ஒரு பிராயச்சித்தஞ் செய்து விட்டாற் சரி என்றது ஆட்சிச் சட்டம். "இல்லை அது மனுநீதியைப் பேணியதாகாது. போடு குப்பையிலே அந்தச் சட்டத்தை" என்றது மன்னன் நிலை. அந்நிகழ்வின் தெய்விகப் பின்னணி மனுவின் யதார்த்த நோக்கைத் தெய்விகம் அநுவதித்து நின்றமையின் வெளிப்பாடு. இந்த ஆட்சி என் சொத்துரிமையன்று, இது அந்த இறைவன் என்மேற் பொறுப்பித்தது. அதுவும் என் அபிலாஷைப்படி அல்லது என்னவர் ஆலோசனைப்படி நடக்கவல்ல; இதைத் தந்த அந்த இறைவன் திருவுளம் இருந்தவாற்றை விவேகித்துணர்ந்து நடப்பதாக. இங்கு எனக்கு முறைப்பாடு செய்த பசு என் பிரஜையல்ல; அந்த இறைவன் பிரஜை. இதன் முறைப்பாட்டுக்கு யான் அளிக்குந் தீர்ப்பு மனிதநீதிக்கு முழுக்குப் போடுவதாயிருக்குமாயின் அது அந்த இறைவன் தன் பிரஜைக்கு அளிக்குந் தீர்ப்பாக ஒருபோதும் அமையாது என்பதே மன்னவன் துணிபு.

இது அரசநீதியின் இலட்சியம். இது நழுவாமல் இருக்குங் கடமை அரச தர்மம். இதல்லாத இந்த இனத்திலுள்ளதற்கு வேறேதும் பேர் சொல்லலாம். அன்றி அரசதர்மம் எனல் அபத்தம்.

ஆமிக்கமக்கட்டுக்குள் இருந்தாலுங்கூட அரசுக்கு நிம்மதி சூனியம். குண்டுப்புரளி, கொலைச்சதி, பயமுறுத்தல் என்ற தீக்கனாக்கள். ஒரே கலக்கம், பார்த்தாற் பெரிய பரிதாபம். நினைத்தால் வயிற்றெரிச்சல் கூட. ஏன் இந்த அவலம்? கோயில்களுக்குக் குண்டுமழை செல்லடி; சாமிகளுக்குக் கொண்டாட்டம் இல்லை; கோயில்களில் ஆமிகளுக்குக் களியாட்டம். கோயில் தோறும் ஆமிகள் கொள்ளை. அதுதான் ஏகப்பட்ட காரணம். முன்னவனார் கோயிற்பூசைகள் முட்டின் மன்னர்க்குத் திங்குள. திருமூலர் சொன்னாற் சொன்னதுதான். அதற்கு விதிவிலக்குக் கிடையாது. இன்றும் அது கண்கூடு. இங்ஙனம் தன் செயல் தனக்கே தீங்காய் முடிந்ததை உணர்ந்து அரசு திருந்தினால் மட்டும் ஒரு வேளை இந்த நாட்டிற்கும் அரச தர்மத்திற்கும் அந்யோன்யம் வரும். அல்லதில்லை.

ஃ

சிவமயம்

# அறவினை

**ஆத்மஜோதி நா. முத்தையா**

"அறவினை யாதெனில் கொல்லாமை" என்பது வள்ளுவன் வாய்மொழி. கொல்லாதவர்களே நல்லவர்கள். நல்லவர்கள் என்பது வள்ளலார் வாக்கு. ஒன்றாக நல்லது கொல்லாமை என வள்ளுவர் மேலும் உறுதிப்படுத்துகிறார். பொய்யாமையை அதன்பின்பே வைக்கிறார்.

"தன்னுயிர்போல் மன்னுயிரையும் நினை" என்பது பெரியோர் வாக்கு. மன்னுயிர் என்பதற்கு உலகத்தில் நிலை பெற்றிருக்கின்ற உயிர் என்பது கருத்து. சிலர் மன் உயிர் என்றால் மனித உயிர் என்று பொருள் கொண்டு மற்றைய உயிர்கள் எல்லாம் மனிதனுக்காகப் படைக்கப் பட்டவை என்று கூறுவர்.

இந்து சமயம் கல்லுக்கும் உயிர் உண்டு என்று நம்புவது. "கல்லினுள் உறங்கும் சக்தி" என்று பாரதியார் கூறுவர். கல்லு வளருந் தன்மையைப் பெற்றது. ஆனால் அதன் உயிர் உறங்கிக் கொண்டிருக்கிறது.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்
களாய்"

என்று மணிவாசகர் பேசுவார்.

செல்வம் நிலையில்லாததென்று எல்லோரும் உணர்வர். செல்வேம் செல்வேம் என்று செல்வதால்தான் அதற்கு அப்பெயர் ஏற்பட்டது. ஒருவனுடைய செல்வத்தைக் காப்பது அவன் செய்யும் தர்மம்தான். ஒருவன் பெற்றுக்கொள்ளும் செல்வமும் அவன் செய்த தவத்தின் அளவாகவே இருக்கும். "தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்" என்பது பெரியாரின் வாக்காகும்.

செல்வம் நிலையாமைபோல் உடம்பு நிலையாது; இளமையும் நிலையாது. ஆகவே நாளைக்கு ஆகட்டும் என்றிருக்காது உடனே அறத்தைச் செய்க. 'நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்' என்ற அருணகிரியாரின் வாக்கு ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

தக்கார், தகாதவர் என்று பகுத்தறிந்து ஈவது தானம் எனப்படும். அங்ஙனமன்றி வறியராய் வந்து ஏற்றார் யாவராயினும் இன்னார் இனியார் என்று நோக்காது ஈதலே தருமம் என்பதாம். தருமம் புரியும் ஆற்றல் இல்லாதவர் தமக்கு எவ்வளவு சக்தியுண்டோ அவ்வளவாவது கரவாது அளித்தல்வேண்டும். இதனை நோக்கியே நம் மூதாட்டியார் "இயல்வது கரவேல்" என்றனர். அதுவும் செய்யச் சக்தியில்லை எனில் பிறர் தருமம் புரியுங்கால் குறுக்கே விழுந்து எதற்காக இப்படித் தருமம் புரி கின்றாய்? சிறிது கொடுத்தால் போதாதோ? என்று தடுக்காமல் இருந்தால் போதும். அதுவே தருமம் புரிந்தது போலாகும். இது பற்றியே ஒளவைப்பிராட்டியார் "இயல்வது கரவேல்" என்று கூறியதோடு அமையாது அடுத்தாற் போல் "ஈவது விலக்கேல்" என்றனர். இதனைத் திருவள்ளுவரும்,

'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதும்
உண்பது மின்றிக் கெடும்' என்றார்.

அங்ஙனமாயின் நான் ஒருவரையும் தருமம் புரியுங்கால் தடுப்பதில்லை; அதுவே போதுமெனத் தகுதியுடையான் ஒருவன் எண்ணிக்கொண்டு வாளாகிடத்தல் கூடா

தென " ஐயமிட்டுண் " என்றும் உபதேசித் தனர்.

" குன்றிப் பிளவளவு தினையளவு பங் கிட்டுண்க" என்றும் அருணகிரிநாத சுவாமி கள் அருளியபடி நமது வருவாயில் ஒருசிறிது பாகமாவது ஏழைகளுக் கென்று ஒதுக்கி வைத்து அதனை அவர்களுக்கு அன்புடன் ஈந்து மறுமைக்கு மாறாநலனைத் தேடிக் கொள்ளல் வேண்டும்.

கடவுள் அறத்தின் வடிவமாக விளங்கு கிறார். சிவபெருமானுக்கு அறவன் என் றொரு திருநாமம் உண்டு. காரைக்கால் அம்மையார் கைலாய வரை சென்று கண் ணுதற் கடவுளைக் கண்ணாரக் கண்டு களித்து வரங்கேட்குங்கால் "அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க" என் றார். சிவபெருமானுடைய ஊர்தியாகிய இடபம் அறத்தின் வடிவு. தரும விடை என்று அதற்குப் பெயர். அத்தகைய அறவடி வுடைய ஆண்டவனை அடைதற்கு அறத் தினை மறவாது செய்தல் வேண்டும். "அறனை மறவேல்" என்பதையும் உற்று நோக்குக.

இக்கருத்தினை மெய்ப்பிக்கும் கந்த புராணச் செய்யுள் பின்வருமாறு:

" தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்"

எல்லாராலும் இயன்ற தருமம் செய்ய முடியும். நாளாந்தம் உலையில் போடும் அரிசியில் ஒரு பிடி அரிசியை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டுவைக்க வேண்டும். ஒரு மாசத்தில் நிச்சயமாக அது ஒருகிலோ அரிசிக்குக் குறையாமல் இருக்கும். இத னைக்கொண்டே பல தருமங்கள் ஆற்றலாம். நாவலர்பெருமான் பிடியரிசித் தருமத்தைக் கொண்டே பாடசாலை கட்டினார்; நூல்கள் வெளியிட்டார். சிறுதுளி பெரு வெள்ளம் ஆகலாம் அல்லவா?

சென்ற ஐம்பது ஆண்டுகளுக்குள் உலகில் எத்தனையோ மாற்றங்கள். விஞ்ஞானம் பல வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஆனால் மனித உள்ளம் எந்த வகையிலும் வளர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. சுய நலம் நிறைய வளர்ந்துள்ளது. பரநலம் தேய்ந்துபோயிருக்கிறது என்றே கூற வேண்டும்.

அடியேனுடைய பேரனாருடைய காலத் திலே பால் விற்றால் பாவம் என்று அவர் கள் பால் விற்பதில்லை. எந்தத் தேவைக்கு வந்தாலும் பால் பணம் வாங்காமலே உத வினார்கள். தந்தையாருடைய காலத்திலே பால் விற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் தண்ணீர் கலத்தல் கொடிய பாவமாகக் கருதப்பட்டது. ஆனால் என் னுடைய காலத்தில் தண்ணீர் கலவாமல் விற்றால் பாவம் என்ற நிலைக்குத் தருமம் தள்ளப்பட்டு விட்டது.

எம்முடைய இன்னல்கள் எல்லாவற்றுக் றுக்கும் மூலகாரணம் ஒன்றுள்ளது. கோயில் களில் நடைபெற்ற கோபூசை இப்பொழுது நடைபெறுவதில்லை. அதற்குப் பதிலாக வீதிதோறும் மாட்டிறைச்சிக்கடை என்ற விளம்பரம் தொங்குவதைப் பார்க்க முடி கிறது. எம்மைப் பெற்ற தாய் ஒரு குழந் தைக்கு மாத்திரம் பால் கொடுக்கிறாள். ஆனால் பசுவோ உலகில் உள்ள குழந்தை கள் எல்லாவற்றுக்குமே பால் கொடுக்கிறது. உலகத்திற்கே தாயாக விளங்கும் பசுவைக் கொலை செய்தலைப் பூமாதேவியால் கூடப் பொறுக்க முடியவில்லை. " பசுவுக் கொரு வாயுறை " என்று திருமூலரும் கூறினார்.

* * *

உ

சிவமயம்

# பங்குனி உத்தரத் திருநாள் மகிமைகள்

*************************************

திருமுறைப் பாராயணச் செல்வர்
சிவ. சண்முகவடிவேல்

பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரம் சேர்ந்த நாள் பங்குனி உத்தர விழாவாகப் பன்னெடுங் காலமாகக் கொண்டாடப்பட்டு வரும் பழமைமிக்க ஒரு பெரு விழாவாகும். அதனாற்றான் ஞானக் குழந்தை நவிற்றிய பூம்பாவைப் பாட்டான நற்றமிழ்ப் பதிகத்தில் மலர் ஒன்றின் நான்கு அடிகளிலும் 'விழா'ப் பொலிவு மெய்த் திருவாக்கெனும் அமுதமாகப் பொலிந்திருப்பது பாடி இன்புறத் தக்கது. அந்த விழா மலிவிழா, கலிவிழா, பலிவிழா, ஒலிவிழா என்று அமைந்திருப்பதே பங்குனி உத்தர விழாவின் பொலிவைப் புகட்டாமல் புகட்டுகிறது. அம்மலர் இதுவாகும்.

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந் [தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பா [வாய்.

பங்குனி உத்தரம் சிவபெருமான் மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை உலகறியத் தீவேட்ட திருநாள் ஆகும். ஆதலால் அண்ட புவனங்கள் அனைத்தும் பெற்ற அரும்பேறுகள் அனேகம். அவற்றுள் முதலாவது,

இருபா லாகித் துவன்றிய உயிர்கள் எல்லாம் இன்பொடு போகமாற்றி இனிதமர்வுற்றன.

விளக்கம்:– இறைவனைப் பிரிந்து இறைவி இமயமலையில் தவஞ்செய்து கொண்டிருத்தலாலும், இருவருமுணரா அண்ணல்..... 'உரத்திற் சீர்கொள் கரதல மொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி யோகுசெய் வாரி லுற்'றிருப்பதாலும் தேவர்கள் முதல் ஆண் பெண் உயிர்கள் அனைத்தும் பெண்ணகத் தாண்மை கூடுஞ் சிறு நலம் பிழைத்தது. மகளிர் மைந்தர் கூடினரிருந்து மின்பங் கொண்டிலர். அந்நிலையைப் பிரமதேவர் "அன்னை தன்னையகன்றரன் யோகிபோல், என்ன துஞ்செயலின்றி யிருத்தலான், முன்னை ஆண் பெண் முயக்கம தின்மையாய், மன்னுயிர்த்தொகை மல்கலின்றாயதே நல்கல் பெற்ற தமியனும் நாமகட் புல்கல் பெற்ற புணர்ச்சியின் றாகியே அல்கல் பெற்ற அருந்தவ யோகரின் ஒல்கல் பெற்றனன் உண்மையிதாகுமால்" என்று தம்குறையை நாராயணரிடத்தில் கூறுமுகத்தால் அறியலாம்.

பார்வதி அம்மை திருக்கல்யாணத்தின் பின்னர் உயிர்கள் முன்பு போல் இன்பொடு போகமாற்றி இனிதமர்வுற்ற திருவருளைப் பின்வரும் கந்தபுராணப் பாடல் நன்குணர்த்தும்:

அன்பினர்க் கெளிவந்துள்ள
ஆதியம் பரமன்மாது
தன்புடை யாகச்சீயத்
தவிசின்வீற் றிருத்தலோடும்
துன்பகன் றிருபாலாகித்
துவன்றிய உயிர்களெல்லாம்
இன்பொடு போகமாற்றி
இனிதமர் வுற்றவன்றே.

இக்கருத்து அமையப் பெற்ற அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ் ஒன்று மேலும் இன்பம் பயப்பது:

மண்ணில்நல் லவண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி
யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங்
கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும்
பெருந்தகை யிருந்ததே.

2

இரண்டாவது, மாரனின் தோற்றம்

விளக்கம்: சிவபிரானின் மோனத்தை நீக்க மன்மதன் நறுமலர் வாளி ஐந்து நாதன் மேற் செல்ல விட்டான். 'விமலன் கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற் சுட்டது' மதனவேள் சாம்பரானான். பெருமானுடைய திருக்கல்யாணத்தின் பின் இரதி நீறான மன்மதனை மீண்டும் கணவனாகப் பெற்றாள்.

"... அழுங்கிய இரதி நோக்கி மனமகிழ் சிறந்து கார்காண் மஞ்ஞையிற் களிப்ப அங்கட் குனிசிலை கொண்ட மாரன் கொம்மெனத் தோன்றினானே" என்பது கந்தபுராணம்.

மூன்றாவது, கந்தசுவாமி திருவவதாரம்.
"பெற்றும் உகந்தது கந்தனையே
—தேவாரம்

நான்காவது, இந்திரனாதியோர் வாழ்வும் சூராதியோர் தாழ்வும்.

இந்திரனாதியோர் வாழ்வு பெற்றது பற்றிய கந்தபுராணம்:

மாறுமுகங் கொண்டுபொரு
வல்லவுணர் மாளாமல்
நூறுமுக மெட்டு
நோதக் கனபுரியத்
தேறுமுக மின்றித்
திரிந்தோமை ஆளவன்றோ
ஆறுமுகங் கொண்டே
அவதரித்தாய் எம்பெருமான்.

ஐந்தாவது, தமிழுக்குற்ற சிறப்பு.

விளக்கம்: சிவபிரானின் திருக்கல்யாணத்தின் பொருட்டு அண்ட புவனங்கள் அனைத்திலுமுள்ள முப்பத்து முக்கோடி தேவர்களும் இமயமலையில் வந்து சார்தலினால் வடக்குத் தாழ்ந்தது; தென்னாடு அறிவுக் கனமற்றதினால் உயர்ந்தது.

என்பது அது.

அறிவால் தாழும் வடக்கைத் தமிழால் சமன்செய்ய வல்லார் அகத்தியர் ஒருவரே. சிவபெருமான் அகத்தியரைத் தென்னாட்டுக்கு ஏகப்பிரதிநிதியாகப் போகப் பணித்தருளினார்.

அகத்தியர் செய்த நூலிலிருந்தே தமிழிலக்கணந் தோன்றிற்று.

"ஆனால் முனிகேள் ஒருநீயிவ்
வசலம் நீங்கித்
தேனார் மருத வளமேயதென்
னாடு நண்ணி
வானார் பொதிய மலைமேவுதி
வையமெலாம்
மேனா ளனவே நிகராகி
விளங்கு மென்றார்".

அகத்தியனாரும் அவ்வாறே பொதியமதில் பொருந்தி இருந்தார். புவனியும் உயர்வு தாழ்வற்ற சமநிலை எய்தியது.

"பொதியம தென்னும் வெற்பிற் புனிதமா முனிவன் வைகத் துதியுறு வடபாற் தென்பாற் புவனியோர் துலைபோலொப்ப அது பொழு துயிர்க ளானோர் அணங்கொரீஇ அரனை யேத்தி மதிமகிழ்ந் தமர்ந்தார்" என்பது கச்சியப்பர் வாக்கு.

இவைபோல்வன சிறப்புக்கள் பங்குனி உத்தரத்திற்கு அனேகம் உண்டு. விரிக்கிற் பெருகும் சுருக்கில் அடங்கா.

பங்குனி உத்தரத்தை உலகமெல்லாம் கொண்டாடும் சிறப்பினைத் திருநாவுக்கரசு சுவாமிகளும்,

"ஆராய்ந் தடித்தொண்டர்
ஆணிப்பொன் ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி
உத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன்
அடித் தொண்டன் நம்பி நந்தி
நீரால் திருவிளக் கிட்டமை
நீணா டறியுமன்றே"

என ஆரூர்ப் திருப்பதிகப் பாமாலையில் தொடுத்துள்ளார்.

அவ்வாறான சிறப்புக்கள் அமைந்த பங்குனி உத்தரத் திருவிழாவிற்குப் பொன் வேண்டிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப் புகலூர்ப் பெருமானிடத்தில் சென்ற ருளினார்.

"செறிபுன் சடையார் திருவாரூர்த் திருப் பங் குனியுத்திரத் திருநாள் குறுகவரலும் பரவையார் கொடைக்கு விழாவில் குறை வறுக்க' நிறையும் பொன்கொண் டணை வதற்கு நினைந்து நம்பி திருப்புகலூர், இறைவர் பாதம் பணிய எழுந்தருளிச் சென்றங் கெய்தினார்." என அருண் மொழித்தேவர் அருளுவார்.

பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை, புகலூர் பாடியதால் தலைக்கு அணையாக வைத்த செங்கற் களையே பொற்கட்டிகளாகப் பெருமான் புரிந்து அருளினர்.

மகிழ்ந்து இன்புற்றுப் பரவையாரோடு அமரும் நாளில் சுந்தரமூர்த்தி நாயனார், பங்குனி உத்தர விழாவிற்கு மீண்டு வந்து விடுவேன் என்று பரவையாரிடத்தில் கூறி விடை பெற்றுப் பிற தலங்களையும் தொழச் செல்வார்.

திருவொற்றியூரில் 'சங்கிலி'த் தொடக் குண்டார்.

முன்னிய காலங்கள் முறைமையினால் வந்தகலத் திருவாரூர் அணிவீதி அழகரவர் மங்கல நாள் வசந்தம் எதிர்கொண்டரு ளும் வகை நினைந்தார்.

"வெண்மதியின் கொழுந்தணிந்த வீதி
விடங் கப்பெருமான்
ஒண்ணுதலார் புரைபரந்த
ஓலக்கம் அதனிடையே
பண்ணமரும் மொழிப்பரவை
யார்பாடல் ஆடல்தனை
கண்ணுறுமுன் கண்டுகேட்
டார்போலக் கருதினார்.

உடனேயே பரவையாருக்குத் தாம் பங்குனி உத்தரத் திருநாளுக்கு வந்து விடு விடுவேன் என்று கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டேனே என்று மிக வருந் தினார்.

பின்பு திருவாரூருக்கு வந்தே விட் டார். எவரெனினும் எங்கிருப்பினும் திரு வாரூர்ப் பங்குனி உத்தர நாளுக்கு வந்தே விடுவர் என்பது இதன் தாற்பரியம். இவ் வளவுக்கு மேன்மையானது பங்குனி உத் தரத் திருநாள்.

---

## ஒரு மனிதனில் இரு குணங்கள்

நாட்டில் ஒரு மனிதனில் இரு குணங்களைக் காணலாம். ஒன்று - கடன் பெறும் வரைக்கும் ...

இரண்டு - கடனைத் திரும்ப அடைக்கும்போது . . .

நாம் எப்படித்தான் வேதாந்தம் பேசினாலும், கடன் பெற்றபோது இருந்த மனமகிழ்ச்சி திருப்பக் கொடுக்கும்போது இருக்க மாட்டாது. இப்படியான வார்த் தையை நான் சொல்வதால் உங்களுக்குக் கசப்பாகத்தான் இருக்கும், ஆனால் இந்த இரு குணங்களும் எம்மிடம் இல்லை என்போர் எம்மில் யார்?

ஒருவன் எமக்கு உதவி செய்யும்போது மலைபோல் தோன்றியவன் திரும்பக் கேட்கும்போது எலிபோலத் தெரிவான். நல்ல உள்ளம் உள்ளவன்தான் எமக்குக் கடன் தருகிறான். ஏன் என்றால் நல்லவன்தான் நம்பும் பழக்கமுள்ளவன். இத னால் நம்புகிறவன் ஒரு கோழை, நம்பாதவன் விவேகி என்ற கருத்தும் உண்டு.

நீ ஒரு விவேகியாக இரு. ஆனால் அவனைக் கோழை என்று மட்டும் சொல்லாதே.

கடன் பெற்றபோது நடந்த இசைத்தட்டை உன் நெஞ்சில் போட்டுப் பார்த் தாயானால், நீ கொடுத்தே தீருவாய்.

"கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கைவேந்தன்" அன்று. கடன் கொடுத்தார் நெஞ்சம்போலக் கலங்குகிறான் இன்று.

திரு. க. வடிவேலு அவர்கள் எழுதிய 60 - ல் அறுபது என்ற நூலிலிருந்து.

உ

சிவமயம்

# சித்தர்கள் வரிசையிற் செல்லாச்சி அம்மையார்

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

இடையறாத இறைசிந்தனை, ஆலய வழிபாடு, செபம், தியானம், சமயஅறிவு, நல்லார் இணக்கம், குருவருள் என்பன ஆன்ம ஈடேற்றத்திற்கு உறுதுணையாக அமைகின்றன. அன்பு நெறியிலே நின்று கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் என்றும் இறைவனைத் தம்மிற் கண்டு மகிழ்ந்து உரையாடி உறவாடி வாழ்பவர்கள் சித்தர்கள் என்றும் நூல்கள் விளக்குகின்றன. மக்கள் புறவாழ்வு பற்றிச் சதா சிந்தித்துக் கொண்டு இருப்பதனால் துன்பப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அகவாழ்வு பற்றிய எண்ணம் இருக்கும் போதே மனிதன் ஆன்மீகத் துறையில் முன்னேற முடிகிறது. ஈழத்திலும் சித்தர் பரம்பரை ஒன்று இருந்து வந்த காரணத்தால் மக்கள் அகவாழ்வு பற்றிச் சிந்தித்துச் செயற்பட்டனர்.

பக்தர்களும் சித்தர்களும் தவஞ் செய்யும் இடங்கள் புனிதத்தன்மை வாய்ந்தவையாக விளங்குகின்றன. அவர்களுடைய சிந்தனை, பேச்சு, செயல் மக்களுக்குச் சமய உணர்வை ஏற்படுத்தி உள்ளுணர்வைத் தூண்டுகின்றன. சித்தர்கள் ஒரு புனித பரம்பரையை உருவாக்கினார்கள். கொழும்புத்துறை சிவயோகசுவாமிகளும் நயினாதீவு முத்துக்குமார சுவாமிகளும் நடமாடிய பெருமைமிக்க சுன்னாகத்தில் சமய ஈடுபாடும் தமிழ்ப்பற்றும் மிக்க பரம்பரையைச் சேர்ந்தவர் செல்லாச்சியம்மையார். அக்கால வழக்கப்படி அம்மையார் கல்வி கற்கப் பாடசாலை செல்லாது வீட்டிலேயே நாவலர்பெருமானுடைய இரண்டாம் நான்காம் பாலபாடங்களையும் முதலாம் இரண்டாம் சைவவினாவிடைகளையும் கற்று ஆழமான பரந்த அறிவைப் பெற்றார். நாவலர்பெருமானுடைய நூல்களைக் கற்ற காரணத்தால் அம்மையார் பெற்ற சமய அறிவு, சமய ஆராய்ச்சிக்கு வித்திட்டது. நூல்கள் மூலம் பெற்ற அறிவும் குடும்பத்தில் அவருக்குக் கிடைத்த அனுபவமும் பெரியோர்களின் தொடர்பினால் ஏற்பட்ட அறிவும் அவர் சமய வாழ்வு வாழ வழி வகுத்தன. நல்லார் இணக்கம், பெரியோர்களின் ஆசி என்பன என்றும் அவருக்கு உறுதுணையாக அமைந்தன. பற்றற்றானின் பாத கமலங்களைப் பற்றுவதற்கு உலகப் பற்றுக்களைக் கைவிட்டார். அவருடைய இல்லம் ஒரு ஆச்சிரமமாக மாறியது. அவருடைய வீட்டில் அமைந்திருந்த கிணறு புனிதத் தன்மை பெற்று எல்லோராலும் தீர்த்தக்கிணறு என்று அழைக்கப்பட்டது. காலையில் நான்கு மணிமுதல் இரவு பத்து மணிவரை அவர் இறைவழிபாட்டிலும் சமய நூல்களைப் படிப்பதிலும் செலவிட்டார்.

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும பொருட்டேயாம்" என்ற ஆறுமுகநாவலரின் கூற்று அம்மையார் வாழ்விலே ஒருபுதிய திருப்பத்தை ஏற்படுத்தி விட்டது. சுன்னாகத்தில் தனது இல்லத்துக்கு அருகாமையிலுள்ள சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்துக்கும் மயிலணி, சிவன் ஆலயத்துக்கும் சென்று வழிபாடு செய்தார்.

அம்மையார், வைத்தியராகக் கடமையாற்றிய முதலியார் தம்பு என்பவரை 1889 ஆம் ஆண்டு திருமணம் செய்து, இரு பிள்ளைகளுக்குத் தாயானார். ஆன்மீகத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டாலும் தனது குடும்பக் கடமைகளைச் சரிவர மேற்கொண்டார். அம்மையாரின் துணைவரின் மறைவுக்குப் பின் ஆடை அலங்காரங்களைக் குறைத்து, உணவைச் சுருக்கித் தவவாழ்வை மேற்கொண்டார். தினமும் செபம், தியானம், திருமுறைப்பாராயணம்

என்பவற்றில் ஈடுபட்டு வரும்பொழுது சிவ பூசை செய்ய வேண்டும் என்ற விருப்பம் அம்மையாருக்கு ஏற்பட்டது. எல்லோரும் அதிசயிக்கத்தக்க வகையிலே அவருக்கு ஒரு அருமையான சிவலிங்கம் கிடைத்தது. அவர் முறையாகச் சிவபூசை செய்து பூசை முடிவில் சிவலிங்கத் திருமேனியில் இறைவனைக் கண்டு மகிழ்வார். தனக்கு இறைவன் கனவில் தோன்றி உபதேசித்த தாகப் பல சந்தர்ப்பங்களில் அம்மையார் கூறியுள்ளார். அம்மையார் குருவருள் பெற்றுத் திருவருளும் பெற்ற ஒரு சித்த ராக எல்லோராலும் கருதப்பட்டார். இவ்வாறு வழிபாட்டில் ஈடுபட்டு இருக்கும் பொழுது அவருக்கு நிட்டைநிலை ஏற்பட்டு விடும். பல மணித்தியாலங்களுக்கு இவ் வுலக நினைவின்றி இறைவனோடு ஐக்கி யப்பட்டு மகிழ்வார். எனவே அம்மையா ரிடம் அற்புதமான சித்திகள் ஏற்பட்டன. அது அவர்கள் உறவினர்களாலும் அயலவர்களாலும் அனுபவிக்கப்பட்ட ஒரு விஷயமாகும். இதனை அறிந்த மக்கள் அம்மையாரைத் தேடி வரத் தொடங்கினர். திரிகரண சுத்தியோடு வருபவர்களை வரவேற்று அறிவுரை கூறி ஆசி வழங்கி அனுப்புவார். உள்ளத்தூய்மை இல்லாத வர்கள் எதிர்ப்பட்டால் அவர்களைக் கடும் வார்த்தைகளால் ஏசி விடுவார். அவ்வாறு அம்மையார் செய்வதன் நோக்கம் அவர்களைப் படிப்படியாகப் பண்படுத்து வதற்கே என்பதை நாம் அறியமுடிகிறது.

நோயால், பகைமையால், வறுமையால், தோல்வியால் தாங்க முடியாத மன வேதனைப்பட்ட அடியார்கள் பலர், அம்மை யாரை நாடி வந்தனர். அம்மையாரின் கருணை மிக்க பார்வையாலும், ஆசியினாலும் புனித ஸ்பரிசத்தாலும் தங் கள் துன்பங்கள் நீங்கப் பெற்றவர்கள் பலர். அவரிடம் விபூதிப் பிரசாதம் பெற்று, அதனை ஒரு பெரும்பேறாகக் கருதி மகிழ்ந்த அடியார்கள் பலர்.

கொழும்புத்துறை, சிவயோகசுவாமிகள் அம்மையாரைப்பற்றிக் கேள்விப்பட்டு, அம்மையாரைப் பார்க்க விரும்பி, சுன்னாகம் சென்று அம்மையாருடைய தவ வாழ்வின் உயர்வைப் பாராட்டியுள்ளார். இவர்கள் இருவரும் பலமுறை சந்தித்து ஆன்ம ஈடேற்றம் தொடர்பான பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினார்கள். அம்மை யார் தன்னைப் பூரணமாக இறைவனிடம் அர்ப்பணித்து, இறை கட்டளையைச் சிர மேற்கொண்டு கருமம் ஆற்றினார். இறை வன் உள்நின்று உணர்த்தச் செயற்பட்டு மக்கள் தனக்குச் செய்யும் வழிபாட்டையும் இறைவனிடம் ஒப்படைத்து அமைதியாக வாழ்ந்தார்.

அம்மையார் 1929 ஆம் ஆண்டு தை மாதம் சமாதி அடைந்தபொழுது சிவயோக சுவாமிகளின் விருப்பப் பிரகாரம் அவருடைய உடல் தகனம் செய்யப்பெற்றது. தூய வெண்ணீறு பூசிய புனித மேனி, ஒன்றாக முறுகித் திரண்ட பெரிய சடை, அமைதி யான தோற்றம் ஒருங்கே அமைந்த அம்மை யாரின் காட்சியைக் கண்டவர்கள் பாக்கிய சாலிகள். அம்மையாருடைய முறுகித் திரண்ட சடை இன்றும் அவருடைய குடும்பத்தவர்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அம்மையாருடைய குருபூசை வருடந்தோறும் சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் நடைபெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

### மூன்று கரணங்களுக்குச் சிவ ஆணை மூன்று

1. மனம் — அரனடிப் போதுக்காக்கல் (இடையறாது சிவபிரானை நினைத்தல்.)
2. வாக்கு — உயர்ந்த அஞ்செழுத்துக்காக்கல் (திருவைந்தெழுத்தைச் சொல்லுதல்.)
3. காயம் — தம்பிரா னடியார்க்காகப் பாங்குடை யுடையுங் கீளும் பழுதில்கோ வணமும் நெய்தல். (சிவனடியார்களுக்கான ஆடைகளை நெய்து கொடுத்தல்)

அதனால் அடையப் பெற்ற நன்மையாக நேசநாயனார் அரனடி நீழல் சேர்ந்தார்.

திருநாள்: பங்குனி உரோகிணி.

உ
சிவமயம்

# திருத்தொண்டர் புராண வரலாறு

## திருநாடு திருநகர்

சைவப்புலவர், பண்டிதர் ச. சச்சிதானந்தசிவம்

இமயத்தின் உச்சியில் தங்கள் இலச்சினையாகிய புலிக்கொடியை நாட்டிய புவிப்பெருமை உடையவர்கள் சோழ மன்னர்கள். அத்தகைய மன்னர்களுக்குரிய சோழநாட்டைத் தெய்வீக நதியாகிய காவிரியாறு பல்லாற்றானும் வளமையும் செழுமையும் பெருமையும் நல்கி அழகுபடுத்துகிறது.

பொன்மயமாகிய இமயமலையிலிருந்து அருந்தவமுனிவர் அகத்தியர் தென்திசைக்கு வருகின்றார். அகத்தியமுனிவரின் புனித கரத்திலிருந்த கமண்டலம் திருவருளால் கவிழ்ந்தது. அப்பொழுது பூமியில் வீழ்ந்த புனிததீர்த்தமே காவிரியாகப் பெருக்கெடுத்துப் பிரவாகித்து ஓடுகின்றது. நிலமடந்தையின் திருமார்பில் திகழும் நீர் முத்துமாலைபோல் அப்பொன்னி நதி வையமகளுக்கு வனப்பூட்டுகின்றது. பூமகளை வளர்க்கும் செவிலித்தாய் போன்ற பொன்னிநதி நீரினை வழங்கி வையத்தில் எல்லா உயிர்களையும் வளர்த்துக் காத்துச் செழிப்பூட்டும் தன்மையது. சிவபெருமானின் திருமுடியிலிருந்து கங்கைவெள்ளம் பிரவாகிப்பது போலவே சையகிரி உச்சியிலிருந்து பொழியும் காவிரிநதியும் வற்றாத நீரோட்டம் உள்ளது. அதனால் முற்றா வெண்பிறைசூடிய முதல்வனாகிய சிவப்பரம்பொருளின் வற்றாப் பெருங்கருணையையும் வையகத்துக்கு நினைவூட்டி வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி சமைக்கின்றது. வண்ணமலையிலே பிறந்த வண்ணத்தினாலும் எண்ணற்ற அறங்கள் வளர்த்த ஈகைத்தன்மையினாலும் அக்கன்னி நதி அறம் வளர்த்த நாயகியான காமாட்சி அம்மையின் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பாயும் கருணை வெள்ளத்தின் ஒழுக்கம் போன்றது. அற்புதமான அந்தத் தெய்வீக ஆற்றங்கரையில் எண்ணற்ற சிவத்தலங்கள் நிறைந்திருக்கும். அத்திருத்தலங்களை நன்னீராலும் பன்மலர்களாலும் அர்ச்சித்து அலைக்கரத்தால் தொழுது செல்வதனாலே வற்றாத திருவருளை முற்றாகப்பெற்ற செம்மனத்துச் சிவனடியவர்களுக்குச் சமமானதாகவும் விளங்கும்.

காவிரியாற்றுப் புதுப்புனல் திரண்டு வரும்போது வரைமுகட்டிலிருந்து வண்ண மலர்களை வாரி வந்து வண்ணக்கம்பளமாகக் கரையில் விரித்து வைக்கும். கன்னி நதியின் இசைக்கு இசைசேர்ப்பன போல வண்டுகள் தேனுண்டு பாடும். இயற்கை வளம் நிறைந்த சோழ நாட்டின் வயல்களில் பரந்து பெருகிவரும் பெருவெள்ளத்தை உழவர்கள் பெருமகிழ்ச்சியால் கைதட்டி ஆரவாரம்செய்து வரவேற்பார்கள். வயல்களில் உழவர்களும் உழத்தியரும் பல்லாயிரவராய்க் குழுமி, தாளாண்மை இல்லாத வேளாண்மை செய்யும் மாட்சிமைதான் என்னே! வயலில் வெய்யிலில் உழவர் மகளிர் வேலைசெய்யும் அவ்வேளையில் அவர்களின் சிறுமியர் வயல் ஓரங்களில் ஆமை ஓடுகளை அடுப்பாகவும், தசைகழிந்த சங்கைப் பானையாகவும், வெண்சங்கின் சிறு முத்துக்களை அரிசியாகவும் பாவித்து, பூந்தேனை உலைநீராகப் பெய்து சிகப்பு நிறச் சேதாம்பல் பூவை நெருப்பாகப் பொருத்தி ஊதி விளையாடுவார்கள். உண்டி கொடுத்து உயிர்புரக்கும் எதிர்கால இல்லத்தரசியர்கள் அவர்கள்தானே? நீர்வளமும் நிலவளமும் நிறைந்த அச்சோழவள நாட்டிலே குடிமக்கள் தமது வருமானத்தில் ஆறிலொரு பங்கை அரசாங்கத்துக்கு உதவி, மிகுந்ததைக் கொண்டு அறம் பல பேணி, தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்னும் ஐம்புலத்தாறு ஓம்பி

நல்லவராக வாழ்வர். அச்சோழ நாட்டிலே மலைகள் போன்ற மாடமாளிகைகள் நிறைந்த பலப்பல ஊர்கள் மலர்ந்துள்ளன.

அறநெறியில் வழுவாத மக்கள் வாழும் அத்திருநாட்டில் திருமகளும் விரும்பி உறைவாள். தெய்வம் போற்றும் திறனுடைய அத்திருநாட்டில் சிவாயநம என்னும் அஞ்செழுத்தை அன்போடு ஓதும் நெஞ்சகத்தார் நிறைந்து வாழ்வதனால் அகப்பிணியும் புறப்பிணியும் அங்குவர அஞ்சி விலகிச் செல்லும். செந்தமிழ்ப் பரப்பில் சிறந்தோங்கி நிற்கும் சோழப்பேரரசை இனிமையாகப் பரிபாலிக்கும் அநபாயச்சோழனின் அரசியற் சிறப்பின் பெருமை எம்மால் எடுத்துக் கூறும் தரத்ததொன்றல்ல.

## திருநகர்

பெருவளம் நிறைந்த சோழ நாட்டில் பழமைவாய்ந்த நகரங்களில் திருவாரூர் மிகவும் சிறப்புடையதாகும். திருமகள் சிவபெருமானை வழிபட்ட திருத்தலமாகும். அத்திருநகரையே தியாகராசப் பெருமான் கோயிலாகக் கொண்டு எழுந்தருளி இருந்து திருவருள் பாலிக்கின்றார். அத்திருநகரில் வேத ஓசையும் வீணை ஓசையும் சோதி வானவர் தோத்திர ஓசையும் ஆடல் மாதரின் அணிசிலம்போசையும், ஆலயப் பெருமணி ஓசையும் இன்ப ஓசைகளாக எங்கும் ஒலிக்கும். மங்கல வாத்திய ஒலி மணித் தேரொலி யானைகளின் ஒலியோடு குதிரைகளின் ஒலி எல்லையின்றி எங்கும் ஒலிக்கும். இத்தகைய தெருவீதிகளேயன்றி ஆதியுமந்தமு மில்லாத சோதியான சிவபெருமான் தன் தொண்டரான சுந்தரருக்காகக் கமலினி யென்னும் பரவையாரிடம் தூது நடந்தமையால் அப்பரம்பொருளின் பதுமமலர்ப்பாதம் படிந்த தெய்வீகத் திருவீதியும் அமைந்து விளங்குவதால் திருவாரூர் சைவமணமும் தெய்வமணமும் கமழும் நகரமாயிற்று.

பழமையும் தெய்வீகப் புதுமையும் மிக்க திருவாரூரில் சூரியகுலத் தோன்றலாக அநபாய சோழனின் குலமுதல்வனான மனுநீதிச் சோழன் தோன்றி அரசியலை நடாத்தி வந்தான். மண்ணகத்துயிர்களைத் தன் கண்ணினைப் போலப் பேணிப் பாதுகாத்தான். விண்ணகத் தேவர்கள் மகிழ்ந்திட வேள்விகள் பலப்பலவாற்றினான். அறநெறி வாழ்வில் வாழ்ந்து, மனுநீதி நெறிப்படி அரசியல் நடாத்தி, மனுநீதிச் சோழன் என்ற தனது பெயரை மாநிலத்தில் நிலைபெறச் செய்தான்.

முன்னைப் பழம் பொருளுக்கு முன்னைப் பழம் பொருளாகிய வன்மீகநாதருக்கு நடைபெறும் நித்திய நைமித்திய பூசைகளுக்குரிய படித்தரங்களைக் குறைவறச் சிவாகம முறைப்படி அச் சோழ குலக் காவலன் நியமித்தான். அம்மன்னவன் தேவியின் மணிவயிற்றில் திருமகன் தோன்றினான். அவன் பெயர் வீதிவிடங்கன். நற்குணம் சாலவும் நிறைந்து, அரசர்க்குரிய பலகலைகளும் கற்று நன்னெறியி லொழுகும் தந்தை மகிழ் மைந்தனாகி, வளர்ந்து இளவரசாகும் எழில் நலம் எய்தினான்.

ஒருநாள் வீதிவிடங்கன் அரண்மனையிலிருந்து உலாப் போந்து மணியொளி வீசும் மாடவீதியிற் சென்றான். தேரூர்ந்து செல்லும் அவ்விளவரசின் முன்பாக மங்கலப் பாடகர்கள் வாழ்த்தொலியும், கைவளை சிலம்பக் கன்னியர் பாடும் ஏத்தொலியும், முரசங்கள் சங்குகள் மங்கல வாத்தியங்கள் எழுப்பும் பேரொலியும் ஒருங்கு சேர்ந்து முழங்கின. "ஆடும் பெருமான் ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" மனுநீதிச் சோழனின் மாபெரும் தியாகத்தையும் மேன்மைகொள் சைவநீதியையும் சோதிக்க வந்தது போல எவரும் காணாத வகையில் அழகான பசுக்கன்று ஒன்று அத்தேரோடும் தெருவினூடே துள்ளிக்குதித்து ஓடிவந்தது. வீதிவிடங்கனின் தேரின் சக்கரத்தில் எதிர்பாராத விதமாக வீழ்ந்து அப்பசுக்கன்று உயிரை இழந்தது. அப்பொழுது கன்றை இழந்த தாய்ப்பசு கதறிக்கொண்டு ஓடிவந்தது. கன்றின் நிலைகண்டு மண்ணில் புரண்டு கதறியது. அத்தாய்ப் பசுவின் கதறலையும் துடிப்பையும் கண்ட

உள்ளந் துடிதுடித்தான். தேரில் நின்று குதித்தான். உயிரிழந்து கிடந்த கன்றை உற்று நோக்கினான். நான் இனி என் செய்வேனென ஏங்கினான். மண்மேல் வீழ்ந்தான்; எழுந்தான். மனுநீதி காக்கும் என்தந்தைக்கு மாபெரும் பழியை மாநிலத்தில் சுமத்தவா நான் மைந்தனாகப் பிறந்தேனெனப் பரிதவித்தான். அறியாது வந்து சேர்ந்த இப்பழியை என் தந்தையார் அறியுமுன்னே அந்தணர் விதிக்கும் வழியில் பரிகாரம் செய்வதே தருமம் என்றால் அதைச் செய்வதே தக்கதெனச் சிந்தித்தான். தன் சிந்தனை முன்னீர்ப்ப அந்தணர் இருக்கை அடைந்தான். தன் கன்றினை இழந்த தாய்ப் பசுவும் கதறிக்கொண்டு மனுநீதிச் சோழனின் அரசிருக்கையை நோக்கி ஓடியது. குடிமக்கள் தங்கள் குறை தெரிவிக்குமாறு அரண்மனை வாயிலில் கட்டியிருந்த ஆராய்ச்சிமணியை அதன் கொம்பினால் ஆட்டி அடித்தது. மணி ஓசை கேட்ட மனுச்சோழன் திகைத்தான். அக்கணமே அரண்மனை வாயிலை அடைந்தான். கதறி அழும் பசுவின் நிலை கண்டு மனம் கலங்கினான். நிகழ்ந்தது யாது என அமைச்சரை வினவி அறிந்தான். என் அரசாட்சி நன்று நன்று எனத் தன்னைத் தான் இகழ்ந்தான். செய்வது யாதென மீண்டும் அமைச்சரைக் கேட்டான். பசுவதை செய்தார்க்கு வேத அந்தணர்கள் விதித்த பரிகார முறையில் நிறுத்துவதே அறமும் வழக்கமும் ஆகுமென அமைச்சர் கூறினார். அது கேட்ட மன்னன், வழக்கம் என்று கூறும் பிராயச்சித்தம் கன்றிழந்து கதறும் பசுவின் துயர் நோய்க்கு மருந்தாகுமா? ஐந்து பயங்களையும் போக்கி அறங்காப்பான் மன்னனன்றோ! ஆகவே நீங்கள் கூறும் இக்குறுக்குவழி வேண்டாமெனக் கூறினான். தன்குல மகனை அழைத்துக் கொண்டு தேரூர்ந்த திருவீதி அடைந்தான். தருமத்தின் வழிசெல்வது தன்கடனாகக் கொண்டு அருமை மகனின் மார்பில் தேர்ச்சக்கரம் ஏறிச் செல்லும்படி மனுச்சோழன் தேரைச் செலுத்தினான். இதனைக் கண்ணுற்ற அமைச்சர் உயிர் நீத்தார்.

இச் செயற்கரிய செயல்கண்டு, மண்ணவரும் விண்ணவரும் கண்மழையும் பூமழையும் பொழிந்தனர். இடப வாகனத்தில் உமைபங்கராகப் புற்றிடங் கொண்ட பெருமான் தோன்றினார். பசுவின் கன்று உயிர் பெற்று எழுந்தது. மனுநீதிச் சோழனின் மகனும் அமைச்சரும் உயிர் பெற்றெழுந்தனர். கண்ணெதிரே காட்சி தரும் பெருமானை பக்திப் பிரவாகத்தில் ஆழ்ந்து எல்லோரும். வணங்கினர். முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ.

---

**வேப்பம் பட்டை, வேப்பம் பூ:** முற்றிய மரத்தின் பட்டையை நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து காலையில் தேக்கரண்டி அளவு பாலுடன் சாப்பிட்டுவர நூறு வயதானாலும் நரம்புகள் தளராது. இது வருடக்கணக்கில் சாப்பிடக்கூடிய எளிய கற்ப மருந்து. சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு அத்திப்பட்டை, பூவரசம் பட்டை, சிறுகுறிஞ்சான், நாவல் பட்டையுடன் சேர்த்துச் சாப்பிடப் பலனை அளிக்கும். ஒரு வருடம் பழகிய பூவை லேசாக நெய்யில் வறுத்துத் துகையல் செய்து சாப்பிட்டால் பித்தம் தணியும். கண்ணொளி அதிகரிக்கும்.

**காமாலை:** வேம்பின் இலையைப் பறித்துத் தண்ணீர் தெளித்து இடித்துச் சாறு பிழிந்து அரைக்கோப்பை அளவு காலை மாலை சாப்பிட்டு உப்பில்லா உணவு அருந்த மூன்றே நாட்களில் காமாலை குணமாகும்.

**கபம் மற்றும் வயிற்றுப் பூச்சிகளுக்கு:** வேம்பின் கொழுந்து மற்றும் கொஞ்சம் மிளகு, பூண்டு ஒருபல் இவற்றை வெண்ணெய்போல் அரைத்து வெந்நீரில் கரைத்து அடிக்கடி குழந்தைகளுக்கு ஊட்ட மேற்படி வியாதிகள் குணமாவதுடன் வைசூரி முதலிய வியாதிகளும் தாக்காது.

உ

# எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள்

எல்லாவற்றையுங் கடந்து அப்பாலான சிவன் இப்பாலான உலகுயிர்களோடு தொடர்புறச் சாதனமாயிருப்பது அவனது ஆற்றலாகிய சக்தி. அவன் பேரில், பிரபஞ்ச காரியங்கள் யாவும் ஏற்பட்டமை அவளால் வந்த ஆக்கம். அவளை இன்றி இவ்வூரிலும் (இம்மை) புகமுடியாது; அவ்வூரிலும் (அம்மை) புகமுடியாது - இதுமுன் தொடர்பு.

சிவனும் சக்தியுஞ் இங்குள்ள கணவன் மனைவி இயைபின் இலட்சியம். அங்கே அவனும் அவளும் அப்படியிருப்பதன் பிரதி பலிப்பாகவே இங்கே இவனும் இவளும். ஏன்? மற்றும் உயிருள்ளன உயிரில்லாதன எல்லாம் இப்படி இருக்கிறார்கள் என்பது தத்துவக் காட்சி. அது பெரிய விடயம். நகுலமலைக் குறவஞ்சி நாடகத்தில் ஒரு கட்டம். குறவன் சிங்கனும் குறத்தி சிங்கியும் குறி சொல்ல வருகிறார்கள். ஒரு குட்டிச் சம்பாஷணை மேடையேறுகிறது.

சிங்கன்: எப்படி உலகத்தில் இப்படி உருவானோம் சிங்கி.

சிங்கி: அந்த அப்பனின் இச்சைக்கு அம்மையும் ஒப்பிய அதனாலே, சிங்கா.

இங்கே சாமானிய தம்பதி விஷயத்தில் அவர் ஆர் மேலும் தடியெடுத்தால் அவவும் அகப்பட்டதும் கையுமாக அதுதான். — இந்த நிலை அங்குமுண்டு என்கின்றது இம்மேற்கோள். திரிபுரதகனத்தில் 'வில்வளைத்தது சிவன்கையென்றால் நாண் இழுத்தது அவள்கை' என்கிறது அப்பர் தேவாரம். அவர்கள் அப்படியில்லாமல் வேறுவிதமாயிருக்க முடியாது. ஏனெனில் இருவரும் ஒரே உருவில் இரு பாகம். ஒருமுகத்தில் வலப்பாகம் வேதமோத இடப்பாகஞ் சிரிப்பதாக அப்பர் சுவாமிகள் கண்டுரைத்த மற்றொரு காட்சியுமுண்டு. இப்படியிருக்குங் கோலம் அம்மையப்பர் அர்த்தநாரீஸ்வரமூர்த்தம் என்றெல்லாஞ் சொல்லப்படும். இப்படியில்லாது இருவரும் வேறுவேறுருவமாய் இயைந்து வருங் காட்சிகளும் உள. அர்ச்சுனனோடு வேட்டையில் மோதச் சிவன் வேடுவனாய் வந்தபோது அவள் வேட்டுவிச்சியாய் வந்த செய்தி பாரதஞ் சொல்லும். இப்படி இப்படிப் பலபல சம்பவங்கள்.

பிரபஞ்ச காரியம் சிவன் பலபல நிலைகளில் நின்று நிகழ்த்தும் விரிவான பெருங் காரியம். அதற்காகச் சிவன் சதாசிவனாக நிற்கும்போது அவ மனோன்மணி, அவர் மகேசுவரனாக ஆம்போது அவ மகேசுவரி, சிவன் உருத்திரனாக ஆம்போது அவ உமா தேவி, அவர் விஷ்ணுவாக ஆம்போது அவ இலக்குமி, அவர் பிரமா ஆம்போது அவ சரஸ்வதி. இந்நிலைகளுக்கு இறங்காமல் சிவன் பரசிவனாகும்போது அவ பராசக்தி. இப்படிக் காரியார்த்தமாக எவ்வெந் நிலையில் நின்றாலும் பொருளளவிலும் தன்மையளவிலும் இருவரும் ஒன்றுதான். அவர் எத்திறம் அவவும் அத்திறம். சிவன் ஞானமாய் நிற்கும் நிலையில் அவவும் ஞானந்தான். அவர் கிரியையில் நிற்கும் நிலையில் அவவும் கிரியைதான். அவர் போகியாய் இருக்கும் நிலையில் அவவும் போகிதான். அவர் அதிகாரத்தில் நிற்கும் நிலையில் அவவும் அதிகாரத்தில்தான். இப்படி ஒரு பிரிப்பறியா நிலை சிவசக்தி நிலை. ஆனால் சிவன் யோகியாயிருக்கும் நேரம் அவ, தான் வேறாய்த் தவத்திலிருந்த வரலாறு கந்தபுராணத்திலுண்டு. இனி இதற்கெதிர் பிரபஞ்ச காரியமெல்லாம் ஒழியும் அதாவது ஒடுங்கும் ஊழிக் காலத்தில் அவ, பக்கமாயும் இல்லாது பாகமாயுமில்லாது அவருள் ஒடுங்கிக் கொள்ளும் நிலையுமொன்றுண்டு. இதனால் எந்நிலையிலும் சிவனில்லாமற் சக்தியில்லை என்பது வழக்கம். சிலவேளை சக்தியில்லாமற் சிவனில்லை என வழங்குவது முண்டு. அது சிவனிடத்திற் சக்தி எப்போது முண்டு என்ற அளவுக்குச் சரி. அது அன்றி, சக்திக்கு முதன்மை கொடுக்குங் கருத்தில் எடுக்கப்பட்டாற் பிழை. முதன்மை எப்போதுஞ் சிவனுக்கே அதனால் தான் சிவன் முழுமுதல்வன் – இது பிரதானம்.

[ மு. க. ]

உ

# காரடையா நோன்பு (சாவித்திரி நோன்பு)

ஸ்ரீமதி கே. சோமாஸ்கந்த சர்மா
மருதனார்மடம்

காரடையா நோன்பானது சுமங்கலிப் பெண்களுக்கு உரிய ஒரு மஹத்தான விரத மாகும். சுமங்கலிப் பெண்கள் எல்லாரும் கட்டாயமாக இவ் விரதத்தை அனுஷ்டித்து வந்தால் தீர்க்கசுமங்கலிகளாக வாழலாம் என்பதற்கு நமது புராணக் கதைகள் அத்தாட்சியாகும்.

சத்தியவானின் உயிரை யமமகாராஜன் எடுத்துக் கொண்டு போகும் பொழுது சாவித்திரியும் பின்தொடர்ந்து சென்று யமமகாராஜனிடம் வரங்கள் பல கேட்டுக் கொண்டு காடு வழியாகப் போகும் பொழுது நோன்பிருந்து தனக்குக் கிடைத்த கார் அரிசியில் காரடைதட்டி அம்பாளை வழிபட்டுத் தனது கணவனின் உயிரை மீட்டதாக ஒரு வரலாறு. இக் காரடையா நோன்பானது பாரதப் பண்பாட்டில் வந்த இந்துக்களின் வாழ்வை மலர்த்தி நிற்கும் விரதமாகும். அக்காலத்தில் மண்ணகத்துத் விழாக்களைப் பார்த்து மகிழ விண்ணகத்து தேவர்கள் கூட்டங் கூட்டமாக வந்து போனதாகக் கூறுவர். இக் காரடையா நோன்பினை இந்துக்களான அனைத்துச் சுமங்கலிகளும் அனுட்டிப்பர். தனித்தும், பல சுமங்கலிப் பெண்கள் ஒன்று சேர்ந்தும் அனுட்டிப்பது வழக்கம். இங்கு வீடுகளில் இந்த நோன்பை அனுஷ்டிக்க வசதி குறைந்தவர்கள் அம்பாள் கோவில்களிலும் நோன்புக் கயிறு பெற்று விரதம் அனுஷ்டிக்கலாம்.

இந்த நோன்பானது ஒவ்வொரு வருஷமும் மாசிமாத முடிவிலும் பங்குனிமாத ஆரம்பத்திலும் வரும். இந்த நோன்பை அனுஷ்டிக்கும் பெண்கள் காலையிலிருந்து மாலை வரை உபவாசமிருந்து பின்னர் மாலையானதும் பூஜை அறையைச் சுத்தம் செய்து, கோலம்போட்டு, கும்பம்வைத்து அக் கும்பத்தில் புதிய மஞ்சட் கயிற்றினைச் (சரடு) சாத்தி, குத்துவிளக்கேற்றி தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, பூ, காரடை, வெண்ணெய் முதலியவற்றையும் ஆல் இலையில் நைவேத்தியம் வைத்துப் பூஜை செய்து அம்பாளைப் பிரார்த்தனை செய்து புதிய மஞ்சட் தாலிக் கயிற்றை மாற்றிப் பழையதை நீக்கலாம். பின்னர் ஆல் இலையில் காரடையும் வெண்ணெயும் மட்டும் உணவாகக் கொண்டு மறுநாட் காலையில் பாரணை செய்யலாம். இந்தக் காரடையா விரதம் அனுட்டிக்கும் சுமங்கலிகள் உண்ட பின்தான் அவர்களுடைய கணவன்மார்கள் உண்ணவேண்டும் என்பதும் ஓர் ஐதிகம். இவ்விரதத்தினை கன்னிப்பெண்களும் அனுஷ்டித்து வெறும் சரடு மட்டும் கட்டிக் கொள்ளலாம். அதனால் அவர்களுக்கு நல்ல கணவன் கிடைக்கப் பெற்றுத் தீர்க்கசுமங்கலிகளாக வாழுவர் என்றும் ஒரு நம்பிக்கை இந்துக்களிடம் உண்டு. கன்னிப்பெண்கள் இவ் விரத முடிவில் ஒன்று அல்லது மூன்று சுமங்கலிப் பெண்களுக்கு சட்டைத்துணி, மஞ்சள், குங்குமம், பூ, தட்சிணை முதலியன வற்றைக் கொடுக்க வேண்டும். பாரதத்திலும் இங்கும் இந்த நோன்பிற்கு இருவிதமான அடைகள் செய்வதுண்டு. அவை வெல்லஅடை, உப்புஅடை என்பன வாகும்.

**வெல்ல அடை செய்யும் முறை:-** சிவப்புப் பச்சை அரிசியை நனையவிட்டு இடித்து அரித்த மாவில் வெல்லம், தேங்காய் நறுக்கு, முதலியவற்றைப் போட்டு நீர் விட்டுப் பிசைந்து இலையில் சிறிதாகத் தட்டி நீராவியில் வேகவிட்டு எடுத்தல் வேண்டும்.

**கார அடை செய்யும் முறை:-** சிவப்புப் பச்சை அரிசி மாவில் உப்பு, பச்சைமிளகாய், தேங்காய்ப்பூ அரைத்துப் போட்டு பிசைந்து இலையில் சிறிதாகத் தட்டி நீராவியில் வேகவிட்டு எடுத்தல் வேண்டும்.

இவற்றிற்குரிய அளவுகளை அவரவர் களுடைய தேவைக்கு ஏற்ப எடுக்கலாம்.

இவ்வருடம் இக் காரடையா நோன் பானது வாக்கிய பஞ்சாங்கப்படி தமிழுக்கு 30-ந் திகதி (14-3-95) அம்பாளின் தினமாகிய செவ்வாய்க்கிழமையாகும்.

உ
சிவமயம்

## 'சிவனை மறவாதே, கடமையைச் செய், பலனை எதிர்பாராதே'

# இதற்கு ஐயப்பனே சாட்சி

இன்றும் நம்மில் பலர் சிவனை மறந்த நிலையில், கடமைசெய்தால் போதும், கோவிலுக்குப் போவானேன், கடவுளைக் கும்பிடுவானேன், மனம் சுத்தமாக இருந்தால் போதும், அதுதான் கடவுள், இப்படிப் பலவாறு பலர் பேசுவதை நாம் நாளிலும் பொழுதிலும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்படியான அரைகுறை ஞானத்துடன் உள்ளத்தில் தெளிவின்றி வாழ்வோர் பலரை நாம் தினமும் காண்கிறோம். இப்படிப்பட்டவர்கள் இன்றல்ல, உலக சிருஷ்டி முதல் இருந்து கொண்டேதான் இருக்கின்றார்கள். இவர்களின் அஞ்ஞானத்தை நீக்க ஒருமுறை சிவன் பிச்சாடனர் வேடந் தாங்கி ஞானம் இதுவெனத் தெளிவுபடுத்தினார்.

அன்றொருநாள் ...... விஷ்ணுவின் படுக்கையான ஆதிசேஷன் திடீரெனப் பாரம் தாங்கமுடியாத அளவு அதிகரித்திருப்பதை உணர்ந்து, வேதனைப்பட்டு, மகாவிஷ்ணுவைத் தியானித்து வணங்கிக் காரணம் கேட்டு நின்றார். அவரும் உள்ளம் மகிழ்ந்து, பக்தா! முன்னொரு முறை சிவன் ஆனந்த நடனம் ஆடினார். அதனை நான் கண்டு மிக மகிழ்ந்தேன். இன்றும் அந்நடனத்தை நினைத்தபோது மிகவும் ஆனந்தமாக இருக்கின்றது. எனது மகிழ்ச்சியால் எனது சரீரம் உனக்குப் பாரமாக இருந்திருக்கும் என்றார். அதற்கு ஆதிசேஷன் அத்தாண்டவம் எங்கே, எப்போது, ஏன் நடந்தது எனக் கேட்டார். சிவனின் திருவிளையாடலை மகாவிஷ்ணு ஆதிசேஷனுக்குப் பின்வருமாறு கூறுகிறார்:

முன்னொரு காலத்தில் தாருகாவனம் என்றொரு அழகிய வனம் இருந்தது. இவ்வனமானது தபஸ்விகளாலும், மஹாரிஷிகளாலும் நிரம்பியிருந்தது. இவர்கள் யாவரும் வேதம், சாஸ்திரம் முதலியன நன்கு கற்றுணர்ந்து அதன்படியே தங்கள் கர்மாக்களையும் அனுஷ்டித்து வந்தார்கள். கர்மாக்களை நினைந்து நினைந்து தங்கள் கர்மாக்களில் சலிப்பின்றி உழைத்து நின்றவர்கள் கர்மா மயமாகினார்கள். இதனால் ஈஸ்வரன் ஒருவன் கர்மாவுக்கும் மேலாக இருக்கின்றான் என்ற நினைவையே இழந்து போனார்கள், ஈஸ்வரனல்ல தங்கள் கர்மாவே தங்களுக்குப் பலன் கொடுப்பதாக நம்பினார்கள்.

கருணைக் கடலாகிய சிவபெருமான் இவர்களின் அஞ்ஞானத்தைப் போக்கத் திருவுளம் கொண்டு என்னை நினைத்தார். நான் அவர்முன் தோன்றினேன்; அப்போது தாருகாவனத்து மகாரிஷிகளை நல்வழிப்படுத்த வேண்டும் என்றார். அதற்காக சகல புவனங்களையும் மயக்கும்படியான மோகினி வேடம் தாங்கி மஹாரிஷிகளை மயக்கும்படி எனக்கு அன்புக் கட்டளையிட்டார். சிவனும் நந்திகேஸ்வரரின் மேல் ஆரோகணித்துத் தாருகாவனம் சென்று நந்திகேஸ்வரரை ஓரிடத்தில் இருத்திவிட்டு, சகலபுவனங்களும் வியக்கும்படியான பிச்சாடனர் வேடம் தாங்கிக் கொண்டார். ரிஷிபத்தினிகள் இருக்கும் பர்ணசாலையை அடைந்து பிச்சை கேட்டுச் சுற்றித் திரிந்தார். இதனைக் கண்ணுற்ற ரிஷிபத்தினிகள் தம்மை மறந்து பிச்சாடனர்மேல் மோகம் கொண்டு அவரை ஒவ்வொருவரும் தாமே அடைய வேண்டும் என்ற முனைப்புடன் பின் தொடர்ந்தனர். பிச்சாடனரும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆசைகாட்டி வனத்தைச் சுற்றிவந்தார்.

நானும் மோகினி வேடந் தாங்கி மஹாரிஷிகள் தபஸ், ஹோமம் செய்யும் இடங்களில் காமவிகாரத்துடன் சுற்றித் திரிந்

தேன். இதனைக் கண்ணுற்ற இளம் ரிஷிகள் தங்களை மறந்து மயங்கிய நிலையில் தாங்கள் செய்து கொண்டிருந்த கர்மாக் களைக் கைவிட்டுக் கேசம், வஸ்திரங்கள் நழுவ என்னைப் பின் தொடர்ந்தனர். அவர்கள் அனைவரையும் மயக்கி அவர் களுக்கு இசைவது போல் நானும் பல வாறு நடித்தேன்.

இதனைத் தொலைவிலிருந்து கவனித் துக் கொண்டிருந்த நந்திகேஸ்வரர் (தர்ம தேவதை) மிகவும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார். (இந்நிலையில் வைத்துச் சிவன்தான் தர்மத்திற்கும் அப்பாற்பட்ட ஞானப்பொருள் எனல் உணரத்தகும்.)

இது இவ்வாறாக இருக்கக் கண்ட வயதான காமத்தை வென்ற ரிஷிகளுக்குச் சிவனின் திருவிளையாடல் ஒன்றுமாய்ப் புரியவில்லை. மிகவும் கோபம் அடைந் தனர். பிச்சாடனரைத் தண்டிக்கத் தங்கள் முக்கிய ஆயுதமான அக்கினியில் அதர்வண வேதத்தில் கூறியுள்ள அபிசார ஹோமம் (எதிரியைக் கொல்லும் ஹோமம்) செய்த னர். ஹோமாக்கினியிலிருந்து பயங்கர உருவம் கொண்ட புலி வெளிப்பட்டது. பிச்சாடனரைக் கொல்லும்படி அப்புலியை ஏவினார்கள். தீ போன்ற கண்களையும் கத்தி போன்ற நகங்களையும் உடைய அப்புலி ஈஸ்வரன் மேல் குறி பார்த்துப் பாய்ந்து வந்தது. ஈஸ்வரனோ அப்புலியை மடக்கித் தோலையுரித்துத் தமக்கு ஆடையாக்கிக் கொண்டார்.

ஆத்திரம் கொண்ட ரிஷிகள் மேலும் ஹோமம் செய்து கொடிய விஷப்பாம்பு களை யாகாக்கினியிலிருந்து வரச் செய் தனர். அப்பாம்புகளைப் பிச்சாடனர் மேல் ஏவினார்கள். பிச்சாடனரும் அவற்றை எல்லாம் தமக்கு ஆபரணமாக ஆக்கிக் கொண்டார்.

மேலும் கோபமடைந்த ரிஷிகள் யாகாக் கினியிலிருந்து பயங்கரமானதும் மிகவும் பலம் பொருந்தியதுமான அபஸ்மாரம் என்ற பூதத்தை வருவித்தனர். அதனையும் சிவனாக இருக்கும் பிச்சாடனர் மேல் ஏவினர். அக்கினிச்சுவாலை போற் சிவந்த கண்களுடனும், வீராவேசத்துடனும் பயங் கர ஒலியுடனும் அப்பூதம் பிச்சாடனர் மேல் குறிபார்த்துப் பாய்ந்து வந்தது. ஈஸ்வரன் அதனையும் தனது வலக்காலுக் கடியில் போட்டு நசித்து அதன் மேல் ஏறி நின்று கொண்டார்.

இதனைக் கண்ட ரிஷிகள் கோபம் மேலும் மேலும் ஓங்கத் தங்களால் வெகு காலம் பூசிக்கப்பட்டு அதனால் மிகவும் மகிமை பொருந்திய அக்கினியையே பெரு மான்மேல் எரிக்கும்படி ஏவிவிட்டனர். அவ் வக்கினியும் இருமுகங்களுடனும் ஏழு நாக் காகிய சுவாலையுடனும் பெருமானை எரிக்க வந்தது. அந்த அக்கினிக்கும் அதன் சக்தி யைக் கொடுக்கவல்லவரும் புன்சிரிப்பாலே திரிபுரம் என்ற அரக்கனை எரித்தவரும் நெற்றிக்கண்ணைத் திறந்த மாத்திரத்தே மன்மதனை எரித்துச் சாம்பராக்கியவரு மாகிய பெருமான் இவ்வக்கினியைத் தனது இடக்கரத்தில் ஏந்திக் கொண்டார். இது வரை பலன் கொடுத்து வந்த அக்கினியை யும் இழந்த நிலையில் இறுதியாகத் தம் மிடம் எஞ்சியுள்ளதும், சகல கர்மாக் களுக்கும் முக்கியமானதாகவுமுள்ள வேத மந்திரங்களையே பெருமான் மேல் ஏவினர். வேதங்களின் இருப்பிடமாயும், சர்வவேதங் களாலும் புகழப்பட்டவருமாகிய பெருமான் அந்த மந்திரங்களைப் பாதத்தில் சிலம்பாக அணிந்து கொண்டார்.

இவ்வாறாகத் தம்மிடமுள்ள எல்லா வற்றையும் இழந்த ரிஷிகள் தங்கள் தோல் வியை உணர்ந்து கொண்டனர். இதனால் வெட்கித் தலைகுனிந்தனர். கருணாமூர்த்தி யான பெருமான் இவர்களுக்கு ஞானக் கண்ணைக் கொடுத்து, தம்முடைய சடைகள் எட்டுத்திக்கும் விரிந்திட அண்டசராசரங் கள் குலுங்கி நடுங்கிட உக்கிரத்தாண்ட வம் ஆடினார்.

இத்தாண்டவத்தைக் கண்ட ரிஷிகள் மிகவும் பயந்து நடுநடுங்கித் தம்முடைய கர்மாக்கள் ஒன்றும் இவரிடம் பலியாது என்பதனையும் கர்மாக்களுக்கும் மேலானவர்

ஈஸ்வரன் என்பதனையும் உணர்ந்து கொண்டனர். இவ்வுணர்வு மேலோங்க, தாங்கள் செய்த குற்றங்களை மன்னித்துப் பொறுத்தருளும்படி வேண்டினர்.

இவர்களைக் காப்பதற்கும், இவர்களுடைய ஆணவத்தைப் போக்கடிப்பதற்கும் வந்த பெருமான் தன்னுடைய தாண்டவத்தை ஆனந்தத் தாண்டவமாக மாற்றி ஆடி அனைவரையும் மகிழ்வித்தார். இத்தாண்டவம் இடம் பெற்ற இடம் சிதம்பரமாகும். இதனைக் கண்ணுற்ற நானும் நந்திகேஸ்வரரும் மிகவும் ஆனந்தமடைந்து பெருமானுடைய, நிக்ரஹ, அனுக்ரஹ சக்தியை வியந்து கொண்டிருந்தோம்.

இப்படியாகச் சிவன் பிச்சாடனராகவும், நான் மோஹினியாகவும் வேஷம் போட்ட காலத்திலேயே சாஸ்தா என்ற ஐயப்பன் எமக்குப் பிள்ளையாகத் தோன்றினார்.

அஞ்ஞானம் நீங்கி, மெஞ்ஞானம் உண்டாகிய ரிஷிகள் தாங்கள் மோட்சம் அடைய வழிதரவேண்டும் எனச் சிவனைப் பிரார்த்தித்தனர். பெருமானும், நீங்கள் சிவலிங்கம் ஸ்தாபித்துச் சிவபூசை செய்து வரப் பிரம்மஞானம் உண்டாகி மோட்சம் அடைவீர்கள் என அவர்களுக்கு வழிகாட்டி, என்னையும் என் இருக்கைக்குப் போக அனுமதித்துத் தானும் நந்திகேஸ்வரர் மேல் ஆரோகணித்துக் கைலாசம் அடைந்தார். ஆதிசேஷனும் இதனைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார்.

## நெல்லியின் பெருமதி

ஒரு நாளில் ஒரு அப்பிள்பழம் உண்பவர் வைத்தியரிடம் போகாமல் இருக்கிறார்; வாழ்கிறார் என்ற பழமொழி ஆங்கிலத்தில் உண்டு. அண்மைக்கால விஞ்ஞானிகள் கண்ட முடிவு - அப்பிள் பழத்திலும் பார்க்க நெல்லிக்காய் அதிக சத்துள்ளது என்பதாம். நெல்லிக்காயில் எல்லா உணவுச்சத்துக்களும் உள்ளன. அவற்றோடு "சி" இனத்து உயிர்ச்சத்தும் அதன் அல்கோர்பிக் அமிலமும் நெல்லியில் நிறைய உண்டு. மாம்பழம், பப்பாப்பழம் எல்லாவற்றையும்விட நெல்லி உயர்ந்த உணவு என்பர். அன்றி அதிலுள்ள ரானிக் என்னும் பொருள் நெல்லிக்கனியையும் அதன் சத்தையும் கெடாமல் பாதுகாக்கிறது. நெல்லிக்கனி இளைஞர்களுக்கும், பாலுட்டும் தாய்மாருக்கும் மிக நல்லதாகும் என்று சித்த வைத்தியரும் ஆயுர்வேத வைத்தியரும் கூறியுள்ளனர்.

நெல்லிக்கனி பற்களைச் சுத்தம் செய்யும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும். தோல் நோய்கள் வராமல் தடுக்கும். மலபந்தத்தை நீக்கும். இருமல், தடிமன், வாந்தி, மயக்கம், சமியாக்குணம் முதலியவற்றை நீககும். மஞ்சட் காமாலை, இரத்தச்சோகை முதலியவற்றைக் குணப்படுத்தும். உடம்பின் சூட்டைத் தணிக்கும். தாகத்தையும், பித்தத்தையும் போக்கும். குடல்களின் அழுக்கையும் நீக்கும். இருதயம், நுரையீரல் ஆகிய உள் உறுப்புக்கு வலிமை தரும். கண்பார்வையை அதிகரிக்கச் செய்யும்.

நெல்லிக்காயை வற்றலாக்கியும், சாறு பிழிந்தும், ஊறுகாய், சர்பத், லேகியம் செய்தும், இன்னும் பல வழிகளிலும் பலவிதமாகப் பயன்படுத்தலாம். நெல்லிக்காயைப் பச்சையாகவும், நீரில் ஊறவிட்டும் காரம் சேர்த்தும் உண்பர். நெல்லி வற்றல் பழுதாகாமல் நீண்ட காலம் பயன்தரும். சிலர் நெல்லிக்காயைக் கொட்டை நீக்கித் தேனில் ஊறவிட்டு உண்பர். இதனால் தலைவலி, கண்நோ முதலியன குணமாகும்.

நெல்லிக்காய்ச் சாற்றில் தேனும் சிறிது மஞ்சட் பொடியும் கலந்து காலையில் உண்டு வந்தால் நீரிழிவு குணமாகும். நெல்லிக்காயைச் சர்க்கரைவிட்டு இறுக்கமாக மூடிவைத்துச் சில நாட்களின் பின் உண்டால் நல்ல பயன்தரும் என்று மருத்துவர் கூறுவர்.

இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னரே ஔவையார் நெல்லிக்காயின் அருமையைப் பாடி அதனை நெல்லியந்தீங்கனி என்றார். அது அவருக்கு மரணகாலத்தைப் பின் போட்டது என்பர். வீட்டுக்கொரு நெல்லிமரம் நடுவீர்.

நன்றி: க. கனகராசா

உ

சிவமயம்

சமகால நிகழ்வுகள்

# இந்து சமயப் பேரவை - யாழ்ப்பாணம்

# கைதடி சைவச் சிறுவர் இல்லம்

# கொடி வாரம்

## ஆரம்ப விழா

இந்து சமயப் பேரவை - கைதடி சைவச் சிறுவர் இல்லக் கொடி வார ஆரம்ப விழா 10 - 03 - 1995 வெள்ளிக்கிழமை மு. ப. 9.00 மணியளவில் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

விழாவை உதயன் பத்திரிகை நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. ஈ. சரவணபவன், மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராஜா ஆகியோர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

கொடிவாரம் வெற்றிபெற இந்துமத பீடாதிபதிகளான நல்லை ஆதீன குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களும் ஆசியுரை வழங்கினார்கள். பேரவைச் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கொடிவாரத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருவாளர் க. பொன்னம்பலம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

முதற் கொடிகளைக் கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. த. இ. பாலசுந்தரம், சாவகச்சேரி ஜெயமதி ஸ்ரோஸ் உரிமையாளர் திரு. ந. ஜெயவீரசிங்கம், திரு. குழந்தை வேலு, கட்டுவன்புலம் மகாவித்தியாலய அதிபர் திரு. ச. அண்ணாமலை ஆகியோரும் மற்றும் பிரமுகர்களும் பெற்றனர்

விழாவில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், யாழ் மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம், கல்விப் பணிப்பாளர் திருமதி P. கணேசலிங்கம், திரு. சு. சிவபாலன் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். இந்து சமயப் பேரவை உபசெயலாளர் பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவேறியது.

★ ★ ★

தாவிப்படரக் கொழுகொம்பிலாத தனிக்கொடி போல்
வாடித் துடித்திடும் சைவச்சிறுவர் நல்வாழ்வுபெற
கோடிக் கணக்காய் வளர்த்திடவே நன்னிதியுதவி
ஈடில்இந்து பேரவைக் கொடிவாரத்தன் போடீந்திடுமே.

சைவப்புலவர் ச. சச்சிதானந்தசிவம்

உ

சிவமயம்

# கனடாவில் சைவசமயம்

— கவிஞர் வி. கந்தவனம் —

( சென்ற மாதத் தொடர்ச்சி )

அவர்கள் எட்மண்டன் நகருக்குச் சென்று அங்குள்ள சைவப் பெரியார்களுடன் சேர்ந்து ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமி களின் வேண்டுகோளை நிறைவேற்ற அமைக்கப் பெற்றதே மகாகணபதி சங்கம் ஆகும். ஹவாயிலிருந்து கொண்டுவந்த விநாயகப் பெருமான் சிலையை வாடகைக் குப் பெற்ற ஒரு வீட்டில் பிரதிட்டை செய்து வழிபட்டு வருகின்றார்கள். தற் பொழுது மகாகணபதி சங்கம் காணி ஒன்றை வாங்கி அதில் விநாயகப் பெருமானுக்குக் கோயில் அமைக்கும் திருப்பணியில் ஈடுபட்டு வருகின்றது.

அரன்வேலரும் வேலனும் பிறப்பால் வெள்ளையர்; வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்த ஈடுபாட்டால் சிவநெறியைத் தழுவித் தமது பெயர்களையும் சிவசம்பந்த மாக்கியவர் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. ஆக, அல்பேட்டா மாகாணத்தில் சைவ சமய வளர்ச்சிக்குப் பிள்ளையார் சுழி போட்டவர் வெள்ளையர் என்க.

இவ்விதம் கடந்த பதினைந்து ஆண்டு களில் கனடாவில் சைவ அன்பர்கள் மேற் கொண்ட திருப்பணிகளின் விளைவாக சைவ சமய வழிபாடு வளர்ச்சியடைந்து, இன்று ஓர் அனைத்துலகச் சைவ சித்தாந்த மகாநாட்டைக் கூட்டும் அளவுக்குப் பெருமை பெற்றிருக்கின்ற நிலை சிவபுரத்தரசின் திரு வருட்பாடேயாம். அத்துடன், அதிகரித்து வரும் சைவ மக்களின் தொகை, தொண் டர்களின் சேவை, எல்லாச் சமயங்களுக் கும் இடம் விட்டுக்கொடுக்கும் கனடிய மக்களின் பரந்த மனப்பான்மை, கனடிய அரசாங்கத்தின் ஆதரவு, அதன் பல்கலாச் சாரக் கொள்கை என்பன பிற காரணங்க ளாக அமைகின்றன.

## கோயில் வழிபாடு

சமயவளர்ச்சிக்குக் கோயில்கள் இன்றி யமையாதவை. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்கிறது ஔவைப் பிராட்டியாரின் கொன்றைவேந் தன். இவ் வறிவுரைகளுக்கெல்லாம் பின் னணியாக இருப்பது, 'மாசிலா மரபில் வந்த வள்ளல்' நம்பி ஆரூரர் வரலாற்றிலே நடந்த ஒரு சம்பவம் எனக் கருத இடமுண்டு. திருமணக் கோலத்தில் இருந்த தவ வேந் தரைத் தடுத்தாட் கொள்ளவந்த இறைவன் ஆவணம் காட்டி அந்தணர் அவையில் வழக்காடுகையில், " உமக்கிவ் வூரில் வரு முறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக' என்று திருமிகு மறையோர் கேட்கின்றனர். அதற்கு அனைவரையும் அழைத்துச் சென்று தான் இருக்கும் இடம் கோயிலே என்று உணர்த்துகின்றார் புண்ணிய முனிவர்.

பொருவரும் வழக்கால் வென்ற
புண்ணிய முனிவர் " என்னை
ஒருவரும் அறியீ ராகில்
போதுமென் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமும்
நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டுறையே புக்கார்
கண்டிலர் திகைத்து நின்றார்.

இவ்விதம் சேக்கிழார் பெருமான் தெய் வத் தமிழ் நூலாம் திருத்தொண்டர் புரா ணத்தின் முதற் சருக்கத்திலேயே இறைவன் இருக்கும் இடம் திருக்கோயிலே என்பதனை இறைவன் வாயினாலேயே நமக்கு உணர்த்திச் சொல்கின்றார். இந்த உண்மையைக் கனடியச் சைவப்

பெருமக்களும் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள் என்பதை அவர்கள் மேற்கொண்ட, மேற்கொண்டுவருகின்ற ஆலய அமைப்பு முயற்சிகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

ஞான வெளிப்பாட்டின் முதற்படி அன்பு. உண்மையான அன்பு கொண்டு சிவனைப் பரவுதல் வேண்டும்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்.
என்பது திருமந்திரம்.

எவ்வளவுதான் கற்றறிந்தவ ராயினும் அன்பின்றி இறைவனைக் காணலரிது என்பது சைவசித்தாந்தத்தின் சாராம்சம். அதனால் அன்பினை வளர்க்கும் வகையில் கோயில்கள் காட்சிதரல் வேண்டும்; நித்திய நைமித்திய வழிபாடுகள் அமைதல் வேண்டும்.

கோயில் நிர்வாகம் பக்தி சிரத்தையுடன் நடத்தப்படல் வேண்டும். சந்தேகத்துக்கு இடமில்லாத நேர்மையும் பாரம் ஈசன் பணியல தொன்றிலாப் பக்குவமும் கொண்ட மெய்யன்பர்களின் ஆட்சியில் இருக்கும் கோயிலிலேயே இறைவனும் விரும்பி எழுந்தருள்வான். கோயிலல்லாக் கோயிலில் இறைவன் குடியிருக்க மாட்டான்.

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்

என்னும் திருக்குறளின் உட்பொருளை உற்று நோக்குதல் வேண்டும்.

மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு
என்பது ஒளவை ஞானம்.

## சமய அறிவு

இத்தகைய தத்துவங்களை எடுத்து விளக்கிச் சமய அறிவைப் புகட்டும் நிலையங்களாகவும் கோயில்கள் விளங்குதல் வேண்டும். இங்குள்ள தமிழர்கள் மத்தியில் இடையிடையே நடைபெற்றுவரும் சில அசம்பாவிதங்களைக் கவனிக்கையில் இது மிக அவசியமான பணியென்றே யான் கருதுகின்றேன். முதிர்ச்சியுறாத ஆன்மாக்கள் புலன்களுக்குக் கட்டுண்டு புன்னெறியதனிற் செல்லும் போக்கினையுடையன. அவர்களை நன்னெறிப்படுத்துதல் முதிர்ச்சி பெற்ற ஆன்மாக்களின் தலையாய கடனாக இருத்தல் வேண்டும். இக் கடனை நன்கு உணர்ந்தவர் காலஞ் சென்ற கலாநிதி க. செ. நடராசா அவர்கள். அவர் அல்பேட்டாவில் வாழ்ந்த காலத்தில் (1987 - 91) எட்மண்டன் மகாகணபதி சங்கத்தின் ஆதரவுடன் சைவத் தமிழ்ப் பாடசாலை ஒன்றைத் தோற்றுவித்துச் சிறுவர்களுக்குச் சைவ தத்துவங்களையும் நன்னெறியையும் புகட்டி வந்தார்.[8] மொன்றியேலில் உள்ள துர்க்கை அம்மன் கோயிலிலும் வாராந்த சமயவகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தேவார திருவாசக பாராயணம் உள்ளத் தூய்மையை ஏற்படுத்தவும் சைவ நெறியின் மேன்மையை உணர்த்தவும் இன்றியமையாதது. கனடா வாழ் சைவ மக்கள் மத்தியில் சமய நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் உருவாக்கப்பட்ட கனடா இந்து கலாச்சார மன்றம் அதன் கன்னி வெளியீடாகச் சைவத் திருமுறைகள் அடங்கிய திரட்டு ஒன்றைப் பிரசுரித்திருக்கின்றது.

கனடாவில் இந்து சமயப் பத்திரிகைகள் இரண்டு தமிழில் வெளியிடப்படுகின்றன. ஒன்று மொன்றியேல் அன்பர் சங்கரப்பிள்ளை திருநடராசர் அவர்கள் வெளியிட்டு வரும் 'இந்து தீபம்', மற்றையது ரொறன்ரோவிலிருந்து வெளிவரும் 'ஆத்மஜோதி' பத்திரிகை. சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஸ்ண ராஜக் குருக்கள் இதனை வெளியிடுகின்றார்கள். சமய அறிவுப் பணியில் கனடா ஞான மன்றத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் அவர்களது பிரதான நோக்கம் சைவத்தை மட்டும் வளர்ப்பதன்று என்பது அவர்கள் கடந்த ஏப்பிரல் மாதம் இலவசமாக வெளியிட்ட 'மதம்' என்னும் சஞ்சிகையிலிருந்து தெரியவருகின்றது.

(தொடரும்)

உ
சிவமயம்

# ஈழத்துச் சைவர்கள் பார்வையாளர்களாக இன்றி வீறு கொண்ட சைவர்களாகட்டும்!

"ஆறுமுகநாவலரது சிவத்தொண்டுகளை நினைவிற் கொண்டு அவரது சிவப் பணிகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் சிலருள் அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்களும் ஒருவராவர். அச்சுவேலியில் ஆக்கிரமிப்புச் செய்த பாதகர்களான மிலேச்சவாதிகளின் அடாவடித்தனங்கள் குருக்களது பணிகளிற்கு இடையூறு விளைவித்தாலும் அவற்றையெல்லாம் உதாசீனப் படுத்திவிட்டுத் தன் கடமைகளில் கண்ணுங் கருத்துமாயிருந்தார். இயல், இசை, நாடகப் பிரிவுகளிலும் அவரது கவனம் நிறைந்து காணப்பட்டது. கிரியைகளோடு சார்ந்த கிரந்த நூல்களையும், கிரியைகளின் அங்கங்களாக விளங்கும் சாஸ்திர சம்பந்தமான நூல்களையும் பதிப்பித்து, சமய உலகிற்குப் பெரும் பணியாற்றினார். அன்னாரது நினைவின் பயனாக அவரது நூல்களை மறுபதிப்புச் செய்து சைவர்களது கைகளில் கிடைக்கச் செய்வதே மேலான பயனாகும்." இவ்வாறு இணுவில் சாஸ்தா குருகுல ஸ்தாபனம் 26-2-95 இல் அங்கு நடாத்திய வேதாகம விழாவில் பங்குபற்றிய மாவையாதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் பேசுகையில் கூறினார். தொடர்ந்து பேசுகையில், ஸ்மார்த்தர்கள் உழைப்பையும் பிழைப்பையும் கருதியே யாழ்ப்பாணத்தில் ஊடுருவி, இங்குள்ள வேத சிவாகம சிவாசாரியர்களை ஒதுக்கிவிட்டுத் தம் கருமத்தில் கண்ணாயினர். இந்திய பார்ப்பனர் யாழ் வாழ் அந்தணர்களை மேலாதிக்கம் செய்து அவர்களைப் பேசாமடந்தையர்களாக வாழச் செய்துவிட்டனர். வேதம் ஓதுவதற்கேயல்லாது, அதை ஆராய்வதற்கு எவருக்குமே உரிமையில்லை. பயன்தரும் மரமொன்றை அம்மரம் எவ்வாறு உருவானதென ஆராய முற்பட்டு குருத்து, இலை, கொம்பு, அடிமரம், வேர்கள், மூலவேர் என்பவற்றைப் பிரித்துப் பிரித்துப் பகுப்பாய்வு செய்து ஈற்றில் மரமுமில்லை, மரந் தந்த பயனும் இல்லையோ, அதேபோல்தான் வேதங்களை ஆராயின், உள்ளதும் இல்லாமல் உலகமே அழிந்துவிடும். வேதத்தை உணர்வதற்கே புராண இதிகாஸங்களை இறைவன் தோற்றுவித்தார். இவற்றின் அனுசரணையோடுதான் வேதங்களை உணரவேண்டும். இக்காலத்தில் மிலேச்சர்கள் மெல்லமெல்ல எம்மத்தியில் சைவ சித்தாந்த போதனை என்ற போர்வைக்குள் நுழைகிறார்கள். யாழ் பல்கலைக்கழக சைவசித்தாந்த பீடாதிபதி இன்னும் தெரிவு செய்யப்படாமைக்குக் காரணம் சாத்தான் வேதமோதும் மிலேச்சர்களது ஊடுருவலேயாம்.

காசிவாசி செந்திநாதையர், கணேசையர், குமாரசுவாமிக் குருக்கள் என்போர் புறச்சமயிகளது பேயாட்டத்திற்கு ஆப்பு வைத்தவர்கள். இன்றோ ஈழத்து சைவ சமயிகள் நடப்பனவற்றைப் பார்க்கும் பார்வையாளர்களாக வீற்றிருக்கிறார்கள். எனவே வீறுகொண்ட சைவர்களாக சிவநெறியுணர்ந்த வீரர்களாக எம்மையெல்லாம் இழிவுபடுத்தும் வகையில் ஆரம்பித்திருக்கும் சாத்தான் சேட்டைகளுக்கும் மிலேச்ச சித்தாந்தங்களிற்கும் பதிலடி கொடுத்து மிலேச்ச ஆதிக்கத்தை மண்ணோடு மண்ணாகப் புதைக்க இன்றே அனைவரும் சங்கல்பம் செய்க" என்றார்.

இவ்விழாவில் வேதங்கள் பற்றிக் கலாநிதி நா. சுப்ரமண்ய ஐயாவும் சிவாகமம் பற்றி பா. சர்வேஸ்வர சர்மாவும் உரையாற்றினர்.

விழா தர்ம சாஸ்தா குருகுலம் தா. மகாதேவ சிவாசார்யர் தலைமையில் ஏட்டுச் சுவடிகள் ஊர்வலத்தோடு ஆரம்பமானது.

இவ்விழாவில், சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் (பிரதமகுரு, தெல்லிப்பழை துர்க்கையம்பாள் ஆலயம்) ஸ்ரீ சாமி சுந்தரேசக் குருக்கள் (பிரதமகுரு, வண்ணை பெருமாள் கோவில்) முத்து ஜயந்திநாதக் குருக்கள் (பிரதமகுரு, நந்தாவில் அம்மன் கோவில்) ஆகியோருக்கு 'சிவாகம கிரியா தத்துவ நிதி' என்ற பட்டம் வழங்கப் பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்துமத ஒன்றியம் வெளியீடு செய்த "மஹாசீர்வாத" நூலை இந்துமத குரு பீடாதிபதி இலவசமாக வழங்கினார்.

## வாழ்க்கைத் துணை நலம்

இல்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மையாம்.

துணை என்பது வாழ்க்கை இயக்கத்தில் பெண் தன் கணவனுடைய ஆற்றலுடன் தான் ஒன்றி சந்தர்ப்பத்திற்கேற்பத் தனது ஆற்றலைச் சமனாகவோ, மேலதிகமாகவோ, அன்றித் தாழ்வாகவோ ஆக்கி மூவகையிலும் அமைந்திருக்கும் பண்பு.

1. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

நற்குண நற்செயல்களுடன் கணவனின் வரவறிந்து செலவு செய்பவள் இல்வாழ்க்கைக்காம் பெண்.

2. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

நற்குண நற்செயல்கள் இல்லையாயின் ஏனைய வாழ்க்கை வசதிகள் சிறப்புற்றிருப்பினும் இனிய வாழ்வமைதி இல்லையாம்.

3. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.

மனைவி நற்குண நற்செயல்கள் உடையளாம் பட்சத்தில் வாழ்வுக்கு ஒரு குறையுமே இல்லை. அது இல்லையாயின் வாழ்க்கைப் பண்பாக இருக்கப்போவது ஒன்றுமேயில்லை. வாழ்வு சூனியம் என்றாய் விடும்.

4. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

கற்பெனும் கலங்காத உறுதி நிலையுடைய மனைவி வாய்த்தல் ஒருவனுக்குப் பெறற்கரிய பேறாம்.

5. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

கணவனே தெய்வமென எண்ணித் தொழுது கொண்டு விழித்தெழும் பெண்ணுக்கு இயற்கை பணிந்தொழுகும். அவள் பெய்யென மழை பெய்யும்.

6. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தனது கற்பைக் காத்து, கணவனின் உடம்பையும் உள்ளத்தையும் அவன் புகழையும் பேணி உறுதியாக இருப்பவளே நல்ல வாழ்க்கைத் துணை.

7. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

பெண் கற்பைத் தானாக உணர்ந்து காத்தலே தலைசிறந்தது. சபலமடையும் உள்ளமுடைய பெண்ணைச் சிறைவைத்தும் காக்க முடியாது.

8. பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

கணவனைத் தெய்வமாகப் போற்றும் இயல்புள்ள இல்லாள் இம்மை இன்பம் மட்டிலன்று; மறுமையில் பேரின்பப் பெருவாழ்வு பெறுவாள்.

9. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

இல்லாள் புகழில் பெருமை கொள்ளும் உணர்வுநிலை உள்ளவளாம் பட்சத்தில் கணவன் அயலார் முன் நெஞ்சகற்றி நிமிர்ந்து நிற்கும் மாண்புள்ளவன் ஆவான்.

10. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

மனைவியின் நற்பண்பே வாழ்வுக்கு மங்கலம். நல்ல பிள்ளைகள் அதற்கு அணிகலன்.

சிறுவர் பகுதி

உ
சிவமயம்

# திருடனைத் திருத்திய வேடம்

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

— பகவான் இராமகிருஷ்ணர் —

பணக்காரர் ஒருவருக்குச் சொந்தமான ஒரு குளத்தில் மீனவன் ஒருவன் திருட்டுத்தனமாக மீன் பிடித்தான். இந்தச் செய்தியை அறிந்த பணக்காரன் காவலாளிகளிடம் அவனைப் பிடிக்க உத்தரவிட்டான். அவர்கள் தீவட்டிகளுடன் வந்து தோட்டத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். தப்புவதற்கு வழி எதுவும் இல்லாத மீனவன் உடல் முழுவதும் சாம்பலைப் பூசிக்கொண்டு மரத்தடியில் உட்கார்ந்துவிட்டான்.

திருடனைத் தேடிவந்த வேலைக்காரர்களுக்குத் தோட்டம் பூராவும் தேடிப்பார்த்தும் திருடன் யாரும் அகப்படவில்லை. மரத்தடியில் விபூதி பூசிக் கொண்ட ஒரு சந்நியாசியை மட்டுமே கண்டார்கள். விடிந்ததும் ஊராருக்கு அந்தத் தோட்டத்துக்கு ஒரு மகான் எழுந்தருளி இருக்கிறார் என்ற செய்தி தெரியவந்தது.

நூற்றுக்கணக்கான மக்கள் பழங்கள், மலர்கள், பட்சணங்கள் ஆகியவற்றைக் காணிக்கையாகத் தட்டில் கொண்டு வந்தார்கள். அவற்றை அவன்முன் வைத்து வணங்கினார்கள். அவர்களைத் தொடர்ந்து அந்தப் பணக்காரரும் வந்து வணங்கினார்.

திருடன் அதைக் கவனித்தான். "இரவு மீனவனாக இவருடைய கையில் சிக்கியிருந்தால் என்னை அடித்தே கொன்றிருப்பார். இன்று காலையில் சந்நியாசி வேடத்தில் இருக்கும் என்னைக் காலில் விழுந்து வணங்குகிறார். இந்த வேடத்துக்கு இவ்வளவு மகிமையா? என்று எண்ணிக் கொண்டான்.

அப்போது கூடவே அவன் மனதில் இன்னோர் எண்ணமும் தோன்றிற்று. "நான் உண்மையான சந்நியாசியாக இல்லாமல் வேடம் போட்டதற்கே இவ்வளவு மரியாதையோ? நான் உண்மையிலேயே சந்நியாசி ஆகிவிட்டால் எவ்வளவு மரியாதை கிடைக்கும்? நாடே என்னைக் கொண்டாடுமே! என்று நினைத்தான். அந்தக் கணமே துறவியாகிவிட்டான்.

இறைவனை எண்ணிச் சாதாரணமாகவே நீங்கள் பூஜையில் ஈடுபடுங்கள். போகப் போக அது தரும் மனஅமைதி உங்களைக் கவர்ந்துவிடும். நிச்சயம் நீங்களாகவே இறைவனை நாடிப்போக ஆரம்பித்து விடுவீர்கள்.

உதவியவர்: ம. சி. சி.

---

## நான்கு வழிகள்

முதலாவது: உங்களுடைய பெற்றோரைத் தெய்வமாக மதித்துப் போற்றுங்கள். இரண்டாவது: சத்தியத்தைக் கடைப்பிடித்துத் தர்மத்தைச் செய்யுங்கள்; உண்மையையே பேசி நல்ல வழியிலேயே நடந்து செல்லுங்கள். மூன்றாவது: நேரம் கிடைக்கும் போதெல்லாம் நீங்கள் விரும்பும் தெய்வத்தின் வடிவத்தை உளமார நினைத்து திருநாமத்தை மீண்டும் மீண்டும் சொல்லி வழிபடுங்கள். நான்காவது: பிறரைக் குறை கூறுவதையும் பிறருக்கு இடைஞ்சல் உண்டுபண்ணுவதையும் தவிர்த்துவிடுங்கள்.

இவையே நலமுடன் வாழ நான்கு வழியாகும்.

உ
சிவமயம்

## நவக்கிரகம் பற்றி ஓர் ஆய்வு

# சந்திரன்

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

நவக்கிரக மூர்த்தங்களுள் இரண்டாவதாக அமைபவர் சந்திரமூர்த்தி ஆவர். சூரியனையும் சந்திரனையும் சேர்த்து "சூரியர் சந்திரர்" என வழங்குவதும் உண்டு. மூச்சுக்களைப் பிரித்தெடுக்கும் போது வலது நாசி மூலம் வருவதை சூரிய – கலை என்றும் இடது நாசி மூலம் வருவதைச் சந்திர-கலை என்றும் சர – நூல் கூறும். சூரியனை உயிர் என்றால் சந்திரனை உடல் என்பர். சூரியன் அறிவு, சந்திரன் மனம். சூரியனை வெங்கதிரோன் எனவும் சந்திரனை தண் கதிரோன் எனவும் கொள்வர்.

சந்திரனை
"ஸ்வேத ஸ்வேதாம்பரதரோ, தசாஸ்வ
ஸ்வேதபூஷண:
கதாபாணி த்விபாஹோச கர்தவ்யோ
வரத சசீ ||"

என்றவாறும் அவர் வெண்நிறமானவரும், வெண்பட்டுவஸ்திரதாரியாகவும், பத்துக் குதிரைகள் உடையவராகவும், வெண்ணாபரணங்களை அணிந்தவராகவும், கதை ஆயுதத்தைக் கொண்டவராகவும், இரு கைகளுடன் அதில் ஓர் கை வரத முத்திரையுடன் கூடியவராகவும் தியானிக்கலாம். திருப்பாற்கடலைக் கடைந்தபோது இலக்குமிக்கு முன்னதாக அமிர்தத்துடன் தோற்றம் கொண்டவரே சந்திரன். ஆலகால விஷத்தின் வெம்மையைக் குறைத்தவரும் இவரேயாவர், சந்திரனோடு அமிர்தம் சம்பந்தப்பட்டதனால் இன்பம், குளிர்ச்சி, மகிழ்வு என்பனவும் உண்டாயிற்று. உணவு, பயிர், கவிதை, காதற்குளிர்ச்சி, குமுதமலர், பெண் முதலியன யாவும் சந்திரக் கலைகளோடு தொடர்புடையனவாகும்.

மஹாபாரதத்தில் வில்லிபுத்தூரர் சந்திரனைப்பற்றிக் கூறுகையில்,

"பொருந்த வான்உறை நாள்களை
நாள்தோறும் புணர்வோன்,
அருந்த வானவர்க் காரமு தன்புடன்
அளிப்போன்
திருந்த வானவர்க் கரியவன் செஞ்சடை
முடிமேல்
இருந்த வானவன் பெருமையை
யார்கொலோ இசைப்பார்"

"செம்பொன் மால்வரை மத்தினிற்
பணிவடம் பிணித்திட்டு
உம்ப ரானவர் தானவருடன் கடைந்
திடவே
தம்ப மானதும் அன்றிஅத் தழல்விடம்
தணிய
அம்பு ராசியின் ஆரமுதுடன்
அவதரித்தோன்"

எனச் சிறப்பித்துள்ளார்.

வேதமும் வணங்கும் சிவபெருமானது சிரசில் ஒப்பில்லாப் பிறைமதியும் இடங்கொண்டிருக்கிறது. எனவே சிவனை வணங்குபவர்கள் சந்திரனையும் வணங்குகிறார்கள். இதனையும் வில்லிபாரதம்,

"அந்தியாரண மந்திரத் தன்புடன் இதனை
வந்தியாதவர் மண்ணிலும் வானினுமில்லை"

என்றேத்துகிறார்.

இந்தச் சந்திரனை வேதங்கள் "ஸோமன்" என்றும் "சந்திரமா" என்றும் அழைக்கிறது. "சோமரசம்" என்பது ஓர் நூதனமான செடியில் சந்திரக் கலை

கள் தாக்கும்போது ஊற்றெடுக்கும் ரஸமே யாம். இந்தச் சோமரச செடியைப் பற்றி "இலக்கிய கால மகளிர்" என்ற ஆங்கில நூலில் திருமதி சகுந்தலா ராவ்சாஸ்திரி, M. A. கூறியதாவது; சோமரசத்தைத் தரக் கூடிய வகையில் இருபத்திநான்கு வகைச் செடிகளுண்டு. இவைகளில் முதன்மையானது, பதினைந்து இலைகளைக் கொண்டிருக்கும். அநேகமாக வாழை போன்ற உருவமானது. இந்த இலைகள் அமாவாசையன்று உதிர்ந்துவிடும். பின் பிரதமையில் இருந்து ஒவ்வொன்றாக அரும்பி பௌர்ணமியில் இந்தப் பதினைந்து இலைகளும் முற்றி, சந்திரனது கிரணங்களிலிருந்து அமிர்த ரசத்தைப் பெற்றுக்கொள்ளும். பின் ஒவ்வொரு இலையாக உதிர்ந்துவிடும்.

அநேகமாக இச் சோமரசச் செடிகள் நீர்நிலைகளினருகே சந்திரகலைகளை நேராகப் பெறக்கூடிய வகையில் வளர்கின்றன. இச்சோமரசச் செடிகளின் தண்டுகள், வேர்கள் என்பனவும் சோமரசச் சத்துக்களைக் கொண்டிருக்கும். இந்தச் சோமரசத்தையே ஆதிகால ரிஷிகள் தத்தம் யாகங்களின் தேவைகளுக்காகத் தேடிக் கொண்டனர்.

சந்திரன் தனது சந்திர கிரணங்களால் அமிர்தத்தை வர்ஷித்து மூலிகைகள், செடிகள், கொடிகள், மக்கள் என்ற உயிரினங்கள் வளமாக வளரவும் உதவுகின்றார். சந்திரன் மகா விஷ்ணுவின் இதயத்திலிருந்து பிறந்ததாகவும் ஐதீகமுண்டு.

சந்திரனைப் பற்றி ஐதரேய பிராமணத்தில் ஓர் நிகழ்ச்சி கூறப்படுகின்றது. "கந்தர்வ மன்னனொருவன் ஒரு சமயம் சந்திரனைச் சிறை செய்துவிட்டான். அதனால் அமிர்ததாரை இல்லாமற் போகவே கந்தர்வர்களும் முனிவர்களும் பெரும் சிரமப்பட்டனர். எப்படியும் சந்திரனை விடுவிக்க முயன்றனர். அவர்கள் வாக்கை (சொல்) ஓர் அழகியாக உருவாக்கி கந்தர்வனிடம் அனுப்பினர். அந்த தேஜஸ், வாக்வல்லமை, சுகந்தம் என்பவற்றால் ஈர்க்கப்பட்ட கந்தர்வராஜன் அழகியின் எழிலில் மயங்கிய போது அவளது வேண்டுதலால் சந்திரனைச் சிறை நீக்கம் செய்தான்" 'காயத்திரியின் உதவியால் இம் மண்ணுலகிற்குச் சந்திரன் வந்ததாக சப்த பிராமணமும் கூறுகின்றது'.

"தைத்தீரிய உபநிஷதத்தில் சந்திரனைப் பற்றிய கதையுமுண்டு. தக்ஷப்பிரஜாபதியின் பெண்களைச் சந்திரன் திருமணம் செய்திருந்தான் அவர்களுள் ரோஹினியுடன் ஏனையோரிலும் பார்க்க அதிக மயக்கம் கொண்டு அன்பு பாராட்டினார். இதனை அவதானித்த ஏனைய பெண்கள் தமது தந்தையிடம் இதனைத் தெரிவித்தனர். அவரும் சந்திரனை எச்சரித்து எல்லாப் பெண்களுடனும் ஒரே தன்மையாக அன்பு காட்டுமாறு பணித்தார். சம்மதம் கொடுத்த சந்திரன் மீண்டும் ரோஹினியின் மேல்தான் பாசம் கொண்டார். இதனால் கோபமுற்ற பிரஜாபதி சந்திரனைத் தேய்ந்து போகுமாறு சபித்தார். அதனால் சந்திரனது கலைகளும் குறைய ஆரம்பித்தது. இதனை உணர்ந்த மனைவிமார்களும் சூரிய தேவனும் சந்திரனது சாபவிமோசனத்தைப் பிரஜாபதியிடம் இரந்தனர். அதன் மூலம் சந்திரன் பதினைந்து தினங்கள் கலை குறைவதும், பின் பதினைந்து நாள் கலைகள் வளர்வதுமாக சாபவிமோசனம் பெற்றார். இதுவே பூர்வபட்சம், அபரபட்சம் ஆயிற்று. சந்திரன் மணந்த இருபத்தேழு பெண்களின் பெயர்களே அஸ்வினி, பரணி என்ற இருபத்தேழு நட்சத்திரங்களுமாகும்.

இதே உபநிஷதத்தில் வேறோர் கதையுமுண்டு. பிரஜாபதி மூன்று வேதங்களையும் வெளியிட்டபோது சந்திரன் அவற்றைக் கவர்ந்து கொண்டு ஒளித்து விட்டார். பிரஜாபதியின் இரு பெண்களான சாவித்திரியும், சித்தாராவும் சந்திரனைக் கண்டு விட்டனர். சந்திரனும் இளையவளாகிய சித்தாராவை மணஞ்செய்ய முனைந்ததைச் சகிக்காத சாவித்திரி தனது தந்தையிடம் இவற்றைக் கூறவும், தந்தையும் குங்குமத்தில் ஜபமந்திரங்களை உச்சாடனம் செய்து ஆகர்ஷண சக்தி பூசைகளோடு மந்திரித்து, சாவித்திரியின் நெற்றியிலிட்டுச் சந்திரனிடம் அனுப்பி வைத்தார். சாவித்திரியின் குங்கும திலக தரிசனத்தைக் கண்ட சந்திரன் இவளிடம் மயங்கி மணந்து விட்டார். சாவித்திரி மூலம் திருடப்பட்ட மூன்று வேதங்களும் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டது.

ஒரு முறை நாரதரிஷி சிவபெருமானைத் தரிசிக்க வந்தபோது அவரிடம் ஒரு சுவையான மாம்பழத்தைச் சமர்ப்பித்தார். அவ்வேளையில் அங்கிருந்த கணபதிமூர்த்தி சிவனிடம் இருந்து அப்பழத்தினைப் பெற்று உண்ண ஆரம்பித்தார். அவர் உண்பதைப் பார்த்த சந்திரன் கேலியாக அட்டகாசத்துடன் நகைத்தார். இதனால் கோபமுற்ற கணபதி சந்திரனைப் பார்த்து, ''உனது சந்திர கலைகள் மங்கிப் போகுக'' எனச் சபித்தார். உடனேயே சாபம் பீடித்தது. சிவபிரானும் நாரதரிஷியும் அதிர்ந்து போனார்கள். இருவரும் கணபதியை அழைத்து, சாபவிமோசனத்தைச் செய்யுமாறு வேண்டினர். கணபதியும் மனம் நெகிழ்ந்து சாபத்தின் தன்மையை மாற்றினார். ஆவணி மாதத்தில் சுக்கில பட்ச நாலாம் பிறைச் சந்திரனைக் காணும்போது அன்று சண்டாளச் சந்திரனாக இவன் விளங்குவான் என்று சாப விமோசனம் செய்தார். இதனாற்றான் இன்றும் ''நாலாம் பிறைச் சந்திரனைப் பார்த்தால் நாய் பட்ட பாடுபடுவர்'' என்ற பழமொழி உண்டு.

(தொடரும்)

---

உ

### இந்து நாகரிகத் துறைத் தலைவர்
### கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர்

# பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினதும், இந்துநாகரிகத் துறையினதும் முதலாவது கலாநிதியான கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர் 1995-ம் ஆண்டு தை மாதத்தில் இருந்து இந்துநாகரிகத் துறைப் பேராசிரியராக நியமனம் பெற்றுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத் துறையில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர் அங்கு சமஸ்கிருதத் துறைத் துணைவிரிவுரையாளராகப் பணிபுரிந்தார். பின் திட்டமிடல் அமைச்சில் துணைத் திட்டமிடல் பணிப்பாளராகப் பணிபுரிந்தார். 1975-ம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை விரிவுரையாளரானார். ஆகமத்தில் சிவாகமங்கள் சித்திரிக்கும் விக்கிரகவியலில் சிறப்பாய்வு மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார். இந்துப் பண்பாட்டு மரபுகள் என்ற நூலிலும், பல ஆய்வுக் கட்டுரைகளிலும் இவரது ஆய்வுத் திறமையைக் கண்டு இன்புறலாம். சுவீடனில் ( Uppsala ) உப்சலா பல்கலைக்கழகத்தில் சமய வரலாற்றுத் துறையில் சிறப்பாய்வாளராகப் பணிபுரிந்து கொண்டு, பல ஐரோப்பிய நாடுகளில் பல விரிவுகைளை அந்நாட்டறிஞர் வியக்கும் வகையில் நிகழ்த்தினார். பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்களின் பின் 1987 ஆம் ஆண்டில் இருந்து யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவராக இருந்து வருகின்றார்.

இவர் பணி பல்லாண்டு நின்று நிலவ '' இந்து தர்மம் '' வாழ்த்துகிறது.

★ ★ ★

உ

சிவமயம்

சந்தேகம் தெளிதல்

# இந்து மதம் சம்பந்தமான சந்தேகங்களுக்குப் பதில் கூறுகிறார்

திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபைத் தலைவர்,
சித்தாந்தவித்தகர்
சைவப் பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம்

1. கேள்வி:- ஆலயத்தில் சண்டேஸ்வர வழிபாட்டின் முக்கியத்துவம் யாது?

பதில்:- சண்டேஸ்வரருக்குச் சிவசேனாபதி என்றும் சைவ ஆலய பாதுகாவலர் என்றும் பெயர்கள் உள. அதனால் பக்தர்கள் ஆலய வணக்கம் நிறைவேறிய பின் இறுதியில் நாங்கள் திருவருள் பெற்றுப் போய்வருகிறோம். வழிபாட்டின் பூரணபலனைப் பெற்றுத் தந்தருள வேண்டும் என்ற பாவனையில் மூன்று முறை கைதட்டி வணக்கம் செய்கின்றனர்.

2. கேள்வி:- சண்டேஸ்வர வழிபாட்டில் பக்தர்கள் தாம் அணிந்த அங்கவஸ்திர நூலை எடுத்து, சண்டேஸ்வரரிடம் சமர்ப்பிக்கின்றனர். இது பற்றித் தங்கள் கருத்து யாது?

பதில்:- தாம் அணிந்திருக்கும் அங்கவஸ்திர நூலை இறைவனுக்குச் சமர்ப்பிப்பது முறையன்று. சண்டேஸ்வரருக்கு அணிந்த நிர்மாலிகத்தைத் தாம் பெற்று அணிந்து கொள்வதே முறை.

3. கேள்வி:- அம்பிகையின் ஆலயங்களில் சண்டேஸ்வரரைச் சண்டேஸ்வரியாகப் பாவனை செய்து வழிபடுவதன் அர்த்தம் யாது?

பதில்:- ஆலய வழிபாட்டின் இறுதியில் சண்டேஸ்வரரை வழிபடுவதே வழமையாகும். அது எதுவாயினும் சக்தியாய்ச் சிவமாகித் தனிப்பர முத்தியாக முதல்வன் சிவனாதல்போல அம்பாள் ஆலயங்களில் சண்டேஸ்வரியாக வழிபடுதல் சண்டேஸ்வரரையே சாரும்.

4. கேள்வி:- மூலமூர்த்திக்கும் நந்திக்கும் குறுக்கே செல்லக்கூடாது என்று கூறுகிறார்கள். இதன் தாற்பரியம் யாது?

பதில்:- கொடிஸ்தம்பத்தின் முன் வீற்றிருக்கும் நந்தி கைலாய நந்தி ஆகும். ஆகையால் கைலாயநாதரோடு இரண்டறக் கலந்த நிலையில் உள்ளது. ஆகவே மூலமூர்த்திக்கும் கைலாய நந்திக்கும் குறுக்கே செல்வது தவறானதாகும்.

5. கேள்வி:- சிவாகம முறைப்படி அமைந்த ஆலயங்களில் அமைய வேண்டிய நந்திகள் எவை?

பதில்:- சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட என்றபடி சிவதரத்திற்கு வேறில்லாது கர்ப்பக்கிரகத்தில் ஒரு நந்தியும், கொடிஸ்தம்பத்தின் முன் கைலாயநந்தியும், கோபுரவாயிலில் அதிகாரநந்தியும் என மூவகைப்படும்.

6. கேள்வி:- ஆலயங்களில் நடைபெறும் கற்பூர தீபாராதனையின் அர்த்தம் யாது?

பதில்:- வழிபடுபவர் வழிபாட்டின் பயனாகத் தான் எல்லாப் பாசபந்தங்களில் இருந்தும் நீங்கிச் சிவபிரானிடம் ஒன்றுபடவேண்டும் என்றே விரும்புவார்கள். சோதியாய் இறைவனோடு அருள்மயப்பட்ட ஆன்மா இரண்டறக் கலக்கும் சிவப்பேறு எய்தும் என்பதனை, கற்பூரதீபாராதனை உணர்த்துகிறது. பக்தியில் விளைந்த ஆன்மாவிற்கு ஒப்பாக விளங்கும் விளைவு கற்பூரமே தீபாராதனைக்கு உகந்ததாகும். கற்பூரஜோதி தீபஜோதியாய்க் காட்சி தந்து பின்னர் திரவமாகாது திண்ம நிலையில் நின்றே மறைகின்ற நிலை, ஆன்மா இறைவனோடு அத்துவிதமாகக் கலக்கின்ற சைவசித்தாந்த முத்தியின் சுத்த நிலையை உணர்த்துகிறது.

7. கேள்வி:- ஈழ மண்டலம் ஏன் சிவபூமி என்று அழைக்கப்படுகிறது?

பதில்:- மிகப்புராதன காலம் தொடக்கம் திருமூலர் முதலாம் சிவயோகிகள் ஈழ மண்டலத்தைச் சிவபூமி என்று கூறியுள்ளனர். அன்றியும் புராதன காலத்தில் இருந்த இராவணன் மண்டோதரி முதலியோரும் சிவ வணக்கத்திலேயே தமது வாழ் நாளைக் கழித்து இறுதியில் சிவ சாயுச்சியத்தை அடைந்தார்கள் என்று கூறப்படுகின்றது. ஈழத்தில் வாழையடி வாழையாய் வாழ்ந்த பெரியோர்கள் அனைவரும் விபூதி உருத்திராக்கம் அணிந்த சிவாநுபூதி மான்களாய்த் திகழ்ந்து சிவஞானிகளாய்ப் போற்றப்பட்டனர். அன்றியும் தேவாரத் திருமுறைகள் முதலிய பக்திநூல்களும் ஈழத்தைச் சிவபூமியாகவே குறிப்பிடுகின்றன.

---

உலகத்தில் சத்தியம் மறைந்திருக்கின்றது. அது மோகம் என்ற தங்கத் திரையினால் மூடப்பட்டிருக்கின்றது. மோகத்திரை கிழித்தெறியும் வரை சத்தியத்தின் காட்சி கிட்டாது. அறிவாற்றல் குறைவாக இருப்பதனால் அல்ல, அறிவின் மேல் மோகம் மூடியிருப்பதனால் காட்சி ஏற்படவில்லை. மோகம் அகத்திலும் புறத்திலும் உள்ளது. மோகத்தினால் (தடைகள்) திரைகள் பல தொங்குகின்றன. ஆகவே சத்தியத்தைக் காணவேண்டுமானால் அகத்திலும் புறத்திலுமுள்ள மோகம் நீங்கவேண்டும்.

— ஈசாவாய்ஸ்ய உ. நி.

# "இந்து தர்மம்" சஞ்சிகை

## அச்சிட நிதி உதவியோர்

மலர் 1 : திரு. ந. தெய்வேந்திரன்

மலர் 2 : உடுவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 3 : நல்லூர் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 4 : இணுவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 5 : பருத்தித்துறை வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 6 : சுன்னாகம் வாழ் இந்து சமய அபிமானிகள்

# இந்து சமயப் பேரறிஞர்களுக்கு

# ★ ஓர் அன்பான வேண்டுகோள் ★

எமது மதத்தின் பெருமைகளைத் தாங்கி நிற்கும் கருத்துக்கள் அடங்கிய தங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

★ ★ ★

## அன்புள்ள இந்து மக்களுக்கு

இந்தச் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உங்கள் ஆதரவைக் கோருகின்றோம்.

---

விற்பனையாகும் இடங்கள் : பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்,
தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.
குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை.
சிவம் மெடிக்கல், சாவகச்சேரி.

---

இச்சஞ்சிகை, யாழ். இந்து சமயப் பேரவைச் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் அவர்களால், ஏழாலை, மஹாத்மா அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 16-03-95 இல் வெளியிடப்பட்டது.